44175

# PANDIA KINGS

## PART-II

44175
Vol. 2

By
"Vidwan"
N. KANAKARAJIER,
*Tamil Pandit,*
*Municipal High School, Pollachi.*

1211P
N30
85890

PUBLISHED BY
E. M. GOPALAKRISHNA KONE,
BOOK SELLER & PUBLISHER,
MADURA.

[Copy-right] 1930 [*Price As. 8.*

ஸ்ரீ:

# பாண்டிய மன்னர்

## பகுதி-2

பொள்ளாச்சி
முனிசிபல் உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
'வித்துவான்'
பண்டித - நா. கனகராஜையர்
இயற்றியது.

பிரசுர கர்த்தர்:
இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,
புத்தக வர்த்தகர், மதுரை.

காப்புரிமை] 1930 [விலை அணா, 8.

THE B.N. PRESS
1922
PRINTERS MADRAS.

ஸ்ரீ:

# முகவுரை

தமிழ் நாட்டிலே முன்னாளில் இறைமை பூண்டிருந்த முடிமன்னர் மூவகையார். அவருட் பண்டையர் என்ற பெயர்க்குரிமை பெற்றவர் பாண்டியரே. பாண்டியருள் இந்நாளில் யாம் பெயரளவால் அறியத் தக்கவர் பலருளர். சங்க நூல்கள் உலகிலே வளருமாறு தமிழ்த் திருப்பணி புரிந்து புகழ் படைத்த சங்க காலத்துப் பாண்டியருட் சிலர் வரலாறேனும் தெளிவுற விளங்குமாறில்லை. இந்நிலைக்குக் காரணம் பண்டை வரலாறுகள் என வழங்குவனவற்றுட் பெரும்பாலன இயற்கை நெறிக்கு மாறாகவுள்ள அநேக செய்திகளைக் கொண்டிருப்பதும், அறிஞருள் எவரும் உண்மை வரலாறுகளை ஒரு கோவைப்படத் தொகுத்து எழுதி உதவாமையுமேயாம். எட்டுத் தொகை நூல்கள் எல்லாம் இக்காலத்தில் அச்சுருவம் பெற்று வெளிவந் துலவுகின்றன. இத்திருப்பணி புரிந்த பெரியார்க்குத் தமிழ் மக்கள் நன்றி என்றும் உரியதே. பத்துப் பாட்டும் பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்றிரண்டொழிந்தனவும் நல்ல ஆராய்ச்சியுரைகளோடு வெளிவந்துள. இவற்றையெல்லாம் ஒரு சேர வைத்து ஆராய்வதோடு, சாஸனங்கள் என வழங்கும் பண்டையோர் எழுத்துக்களையும் பிற ஆதரவுகளையுங் கொண்டு ஆராய்வதால், நம் பண்டைய மன்னருட் சிலர் வரலாறேனும் ஒருவாறு துணியப்படலாம்.

பாண்டியர் வரலாறுகளைச் சமீப காலத்தில் ஆ
மொழியில் எழுதியுபகரித்த ஸ்ரீமான். நீலகண்ட சா
திரியார்க்கும், தமிழ்மொழியில் சுருக்கம் சுருக்கமாகவே
னும் வரைந்துதவிய அம்பா சமுத்திரம் தமிழ்ப் புலவர்
அரிகர பாரதியார்க்கும், தமிழ் நாட்டுச்சரித்திரம் அறியும்
ஆவலுடையோர் கடமைப்பட் டிருக்கின்றனர். இவ்
வாருகிய பல வகை உதவிகளைக் கொண்டு சங்க காலப்
பாண்டியருள் ஓர் ஐவர் வரலாறுகளை விளக்கியுரைக்க
இந்நூல் எழுந்தது. இந்நூலின் முதற் பகுதியில் மூவர்
பாண்டியரைப் பற்றியும், இரண்டாம் பகுதியில் இரு
வர் பாண்டியரைப்பற்றியும் கூறப்படும். சங்கச் செய்யுட்
களின் ஆதரவைக்கொண்டு அறியலாகும் வரலாறுகளை
இடையிடையே பொருத்தமான முறையில் அக்கால
மக்கள் மனப்போக்குக்கும் வாழ்வின் நிலைக்கும் ஏற்ப
விவரித்து, முன்னைய வரலாறுகளால் அறியலாகாத சில
பாத்திரங்களையும் இடையிடைப் பெய்து, பழமையிற்
புதுமை சில கலந்திருப்பினும் பழமைக்கு மாறுபடா
வண்ணம் இயன்றவளவு அமைத்து, இந்நூற்பகுதிகள்
எழுதப்பட்டுள. 'இவ்வாறு எழுதப்படுவது உண்மை
வரலாறு ஆகுமோ?' என்ற கேள்வி எழலாம். உண்மை
வரலாற்றின் சில பகுதிகளை நன்கு விளக்க உதவ
வேண்டி அயற்பொருள்கள் இடையிடைப் பெய்யப்
பட்டுள்ளனவே யொழிய, வேறு எவ்வகையிலும் சரித்தி
ரப் போக்கினை மாற்றவோ மறைக்கவோ செய்யாமையா
லும், பள்ளிக்கூட மாணாக்கர் உள்ளத்தினைக் கவர்ந்து
அவர்கட்குப் பாண்டியர் ஐவர் வரலாற்றினை விளக்
கும் அரும்பணி பூண்பதாலும், இஃது உண்மை
வரலாற்றோடு பெரும்பாலும் ஒத்ததே. இவ்வைவரை
வரிசைப்படுத்திபது கால வாராய்ச்சி செய்து உண்மை

தெளிந்த மனவுறுதியினு லன்று; சங்க நூல்களிற் காணப்படும் சிற்சில வரலாறுகளின் உதவியாலேயே யாம். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, மாங்குடி மருதனர் பாடிய மதுரைக் காஞ்சியில், முற்காலத்து அரசன் எனவும் நல்லோர் சேர்க்கையாற் பேரின்பம் பெற்ருன் எனவும் புகழப்பட்டுளான். நிலந்தரு திருவின் நெடியோன் என்ற பெயர் அச்செய்யுளில் அதனை யடுத்து வந்துளது. தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனர் பாடிய பாயிரத்தில் வரும் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்ற பெயரும் முதுகுடுமியை நெட்டிமையார் பாடிய செய்யுளில் வரும் முந்நீர் விழவின் நெடியோன் என்ற பெயரும் அதனேடு பொருத்தி ஆராயத் தக்கன. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாடும் பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ளத் தென்றிசை யாண்ட தென்னவனும் அடியிற்றன்னள வரசர்க்குணர்த்தியவனும் இந்திரன் இட்டமாலை பூண்டோனும் மேகத்தைச் சிறை செய்தவனும் ஆகிய ஒரு பாண்டியன் முந்நீர் விழவின் நெடியோன் என்று முன்னே கூறப்பட்டவனு, அவனின் வேரு என்று ஆராய்வதும் அவசியமே. திருவிளையாடற் புராணத்தால் அறியப்படும் உக்கிர குமார பாண்டியன் இச்செயல்கள் செய்திருப்பதாய் அப்புராணத்தின் உதவியால் விளங்கு மாகையால், இவ்வளவு பெருமையும் படைத்தவன் உக்கிரப் பெருவழுதியாய் இருக்கலாமோ என்று சிலர் கூறுகின்றனர்.

அகநானூறு தொகுப்பித்தோன் உக்கிரப் பெருவழுதி யென்பது அந்நூல் வரலாற்றுல் விளங்குகிறது. இவ்வுக்கிரப் பெருவழுதிக்கு நண்பனுயிருந்த சோழன் இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பான், பின்னு

ளிலே தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழி யனால் வென்று சிறைப்படுத்தப்பட்ட கோச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை என்ற சேரனால் போர் புரிந்து வெல்லப்பட்டிருக்கிறான். உக்கிரப் பெருவழுதியால் தொகுப்பிக்கப் பெற்ற அகநானூற்றில் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் வரலாறு தெரிவிக்கும் செய்யுட்கள் ஒன்பது உண்டு. உக்கிரப் பெருவழுதி காலத்தில் அரங்கேற்றப் பெற்ற திருக்குறளின் செய்யுட்கள் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாற்றை விளக்கிய இளங்கோவடிகளாலும் மணிமேகலை யாசிரியர் சீத்தலைச் சாத்தனாராலும் ஆளப்பட்டுள்ளன. இவற்றால் உக்கிரப் பெருவழுதியென்பான் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்குப் பிற்காலத்தவனா, ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு முற் காலத்தவனா என்பதும் விளங்கவில்லை. இறையனார் அகப்பொருள் உரை கேட்டவன் உக்கிரப் பெருவழுதி யேயோ, வேறு பாண்டியனோ என்பதும் விளங்கவில்லை. நக்கீரர், புறநானூற்றிலே இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியிருக்கிறார்; இறையனார் அகப் பொருளுக்குப் பொருள் உரைத்திருக்கிறார். உருத்திர சன்மன் அந்நாளில் ஐயாட்டைப் பிராயத்தானாய் இருந் தான் என்பது அவ்வுரையிற் காணும் செய்தியாம். அவனே அகநானூறு தொகுத்தான். இந்நக்கீரரே, நெடுநல்வாடை பாடித் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் புகழ்ந்தவர். கூல வாணிகன் சாத்தனார் மணிமேகலை பாடிய காலத்திருந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைத் தவிரப் பாண் டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனையும் பார்த்துப்

புகழ்ந்தவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனுற் சிறைப்பட்ட கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை கபிலருக்கு நண்ப ஞவன். அவர் பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தைச் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதன்மீது பாடினர். அவன் முன்னவனுக்கு என்ன முறையானே! தலையாலங்கா னத்துப் போரில் இறந்தசேரல் இவ்விருவர்க்கும் என்ன முறையானே!

இவ்வாறு பல அரசர் பெயரும் முன்பின் அறியலா கா வண்ணம் பிணைந்து கிடக்கும் செய்யுட்களிலிருந்து உண்மை வரலாற்றை ஊகித்துணர்வது மிகவும் சிரம சாத்தியமே. உக்கிரப் பெருவழுதியும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும் இருவேறு அரசர் அல்லர், ஒருவனே என்று துணிந்தாரும் உளர். சங்க நூற் குழப்பத்துக் கிடையில் அவர் துணிவுக்குக் கிடைத்த ஆதரவு என்னவோ என்பது அறியலாவதாயில்லை.

இந்நிலையில் இவ்வைவர் பாண்டியர் வரலாறுகளை அவ்வவரைப் புகழ்ந்து புலவர் பாடிய செய்யுட்களில் இருந்து தொகுத்து ஒன்றோடொன்று கலவா வண் ணம் எடுத்து எழுதுவது எளிதோ, பெருமுயற்சியால் இயல்வதோ என்பதை இச்செய்யுட்களை ஆராய்வதே பொழுது போக்காக உடைய அறிஞர் அறிவர். உண்மை வரலாற்றோடு வேறு சிலவற்றைக் கலந்து வைத்தது தொடர்ப்பட்ட சரித்திரமாக இவை தோன்று வதற்கே யன்றி, வேறு கருத்தானன்று.

தமிழ்ப் பயிற்சி பெருகவேண்டும், பண்டை நூல் களில் உள்ளவற்றை ஆராயும் அறிவு வளர வேண்டும் என்று எங்கும் முழக்கமாய் இருக்கும் இந்நாளில்,

பாண்டியர் வரலாற்றை உரைக்கவெழுந்த இச்சிறு நூல் ஆங்கில கலாசாலை மாணவத் தொகுதியினர்க்கும் பிறர்க்கும் சிறிதளவேனும் அம்முயற்சியில் ஊக்கம் பிறப்பிக்குமாயின், அதுவே இதனை யெழுதியதாற் பெற்ற பெரும்பயனாக நினைக்கப்படும்.

தமிழ்த் தெய்வம் துணை நிற்க.

போள்ளாச்சி, 4—9—'30.

நா. கனகராஜையர்,
தமிழ்ப் பண்டிதர்.

---

## உ ள் ளு றை

---


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. உக்கிரப் பெருவழுதி | ... | 1 |
| 2. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் | ... | 47 |

# FOREWORD.

I have great pleasure in writing this foreword introducing Pandit Harihara Ayyar's book on the history of the Pandyas. This book may be regarded as an evidence of the growing interest of Indian scholars of the indigenous type in the study of the ancient history of Southern India. Mr. Harihara Ayyar is well known as an able and facile writer of very good Tamil prose; but it is not so well known how much he was closely associated with that brilliant epigraphist the late Mr. Venkayya in most of his work in the Tinnevelly District. Pandit Harihara Ayyar is pre-eminently fitted by his intimate knowledge of the epigraphical and literary sources of Pandya History to write a book like this

A careful study of the materials presented in this book shows that the Pandyas were an ancient people with a distinctive civilisation. Most of the Pandya Kings were patrons of learning and culture; and some were themselves poets and men of learning. They undertook various works of public utility. The many temples in the Pandya country with their extensive grants of land testify to the wealth of the Pandyas and the way in which they utilised their resources for the welfare of the country. Though they devoted a greater part of their time to wars and conquests, they do not appear to have neglected the material needs of the country.

The normal form of Government was Monarchy. The King surrounded by his ministers, diplomats, sena-

patis, spies etc., and had his council of ministers, Some of the South Indian inscriptions throw cosiderable light on the measures taken to asses and collect the revenue, the method Expenditure trade and commerce, and the organisation of the civil and military departments, and the details of Village-life and Village government.

The Pandya Kings strike us as tolerant in matters of religion. We read of no great wars of religion A remarkable feature of Pandya rule as shown in the pages of this book is the devotion of almost all its Kings to temple-building. It is interesting to note that these temples are located on the base of a hill, the bank of a river, the bund of a tank or channel, or on highlands. It appears to have been the practice of these rulers to build temples and found settlements in commemoration of their victories or in memory of their name. In the case of temples built by tributary princes, they seem to have named them after their overlords. We can also find images in stones and in copper of some of the kings who built the temples and ceremonial respect is their right as of present day trustees at festivals. In those times temples and temple worship often served as a great incentive to literary and religious outbursts. Witness for instance the *Thevaram Thiruvasakam* and other devotional hymns sung in praise and in the presence of the great deities in temples. The temples were not only a means of cultivating a spirit of devotion but in festival times they served as means of gathering all the villagers in the neighbourhood. Besides being centres of learning, they occasionally served as places of protection in times of trouble. It is difficult to exaggerate

the part played by these temples in developing and sustaining the corporate life in South India in ancient times. It is now a matter of common knowledge that the Pandya country was the land of the Tamil Sangam. One can easily call to mind some of the finest classical works ......*Ettuthogai, Pattipattu, Pathinenkizhkanaku, Chintamani, Silapadikaram, Manimegalai.* As has been mentioned already, some of the Pandya kings were themselves no mean poets. Some recent examples are:- Athivirarama Pandya and Varathunga Rama Pandya. The history of the Pandya is replete with instances of state patronage of poets and learned men. One can call to mind the patronage of Mangudi Marudana author of *Madurai Kanchi* at the hands of Neduncheliyan: Tirugnanasambandar was treated with great respect by Koon Pandyan; Maduraikavi was the councillor of the Pandyan king Neduncheliyan Parantaka: Vira Pandyan of Tinnevelly patronised the poet Kasikaliyar.

Though Tamil language and literature had attained a high level of excellence during the time of the Pandyas, very few among the people seem to have been literate. This is borne out by certain inscriptions. It is interesting to observe that the people of the Tamil land seem to have used as writing material palm leaves, stones and copper plates The Tamil alphabet of old was quite different from later Tamil writing; vattelethu being in vogue for a long time. We find verse rather than prose in some of the inscriptions of the period. Coined money seems to have been rare in those times. This is probably the reason why the kings gave besides gifts of cultivable land, large amounts of coin (' Porkasu '). It is interesting

to read the long list of royal dues under the Pandyas Men of different occupations seem to have settled in each village. Some kind of professional tax seems to have prevailed. We may note, for instance, tax levied from weavers, shepherds and horse-dealers. 'Kadami' 'Pattam' are the terms frequently used. There was the land-tax but little is known of the exact proportion of the land-tax. There are instances of remissions of land-tax in times of scarcity, failure of crops etc..

These general observations will suffice to show some of the extremely interesting phases of the history of the Pandyas revealed in this work. The author has endeavoured successfully to present in good tamil prose a continuous and very readable narrative of the political and social history of the Pandya kingdom The materials available for the study of the Pandya history have been used by him with considerable caution and judgment. The later history of the pandyas...... a subject which has not yet been adequately explored is dealt with by the author in greater detail than by any other writer in the field. And the narrative here gains much in force and clarity as author draws upon a close personal knowledge of the monumentel evidence still surviving from the period. All told, this history of the Pandyas is an able production worthy of Pandit Harihara Ayyar's love of our language and country and I have no hesitation in commending the book for use in our schools and colleges.

Chidambaram,<br>17—2—26.

**K. A. NILAKANTAM.**

# பொருளடக்கம்.

(இரண்டாம் பகுதி)

## இடைப்பட்ட பாண்டியர்.


| | | பக்கம் |
|---|---|---|
| 28 | சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் … | 1 |
| 29 | பாண்டியன் அமரபுஜங்கன் … … | 5 |
| 30 | பாண்டியன் ஸ்ரீ வல்லபன் … … | 6 |
| 31 | பாண்டியன் மானாபரணன் | |
| 32 | வீரகேரளபாண்டியன் … … | 7 |
| 33 | சுந்தரபாண்டியன் | |
| 34 | பராக்ரம பாண்டியன் | |
| 35 | குலசேகர பாண்டியன் … … | 11 |
| 36 | வீரபாண்டியன் | |
| 37 | விக்ரம பாண்டியன் | |
| 38 | ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் … … | 22 |
| 39 | மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1–வது … … | 24 |
| 40 | ஜடாவர்மன் குலசேகரபாண்டியன் … … | 36 |
| 41 | மாறவர்மன் சுந்தரபாண்டியன் 2–வது … … | 39 |
| 42 | ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் அல்லது எம்மண்டலமுங்கொண்ட சுந்தரபாண்டியன் … | 44 |
| 43 | ஜடாவர்மன் வீரபாண்டியன் … … | 50 |
| 44 | மாறன் ஸ்ரீவல்லப பாண்டியன் … … | 53 |
| 45 | மாறவர்மன் குலசேகரபாண்டியன் அல்லது எம்மண்டலமுங்கொண்ட குலசேகரபாண்டியன் | 55 |
| 46 | ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 2-வது … … | 62 |
| 47 | மாறவர்மன் விக்ரமபாண்டியன் … … | ” |
| 48 | ஜடாவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் … … | ” |
| 49 | வீரபாண்டியன் … … … | ” |
| 50 | மாறவர்மன் குலசேகரபாண்டியன் … … | ” |

# போருளுதவினோர்.

இந்நூல் நாடெல்லாம் நலம்பெற வுலவுறும்வண்ணம் அச்சுவாகனத்தில் ஆரோகணிக்கும்பொருட்டுப் பொருளுதவிசெய்த கனவான், தென்காசித்தாலூகா திருக்குற்றால க்ஷேத்திரத்துக்கு வடபாலுள்ள, "இலஞ்சி" என்னுங் கிராமத்தில் உயர்தருவாழ்க்கைப் பெறுகின்றவரான மகா-ள-ள-ஸ்ரீ ஐ. எஸ். இராமசாமியாபிள்ளை அவர்களே.

இக் கொடையாளர், மேற்படி ஊர்க்கு வடபாலுள்ள நதியில் (குன்றாக்குடிக்குச் செல்லும் மார்க்கத்தில்) கற் பணியிற் சிறந்த ஓர் பாலமும், ஆங்கோர் அணைக்கட்டும், ஸ்ரீ விநாயகமூர்த்தி திருக்கோயிலும், தண்ணீர்ப்பந்தல் மண்டபமும், இன்னும் சில சாஸ்வதமான தர்மங்களும் செம்மையுறப்புரிந்து சிறப்புற்றோங்கி விளங்கிக்கொண்டிருக்கும் ஓர் சைவ வேளாளர் குடும்பத்திலுதித்தவரான மக-ள-ள-ஸ்ரீ மிட்டாதார், டி. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் மூன்றாவது புத்திரராவர்.

முன்னோர் ஒழுக்கின் முளையென வளர்ந்த இப் பெருந்தகையாரும், மேற்படி இலஞ்சி நகரின் கீழ்பாலுள்ள சித்திராநதியின் மேல்கரையில் ஓர் படித்துறையும், அரசும், குறடும், அதற்குமேல் ஒரு தந்திமுகக் கடவுளையும் பிரதிஷ்டித்திருக்கின்றனர். மேற்படி ஊர்க்கு நடுவிலுள்ள, குலசேகரன் என்னும் அதிவீரராம பாண்டியனால் தன் பெயர் விளங்க முன்கட்டப்பட்ட ஸ்ரீ குலசேகரமுடையார் கோயிலை 1088–1089-ம் ஆண்டுகளில் ஜீர்ணோத்தாரணஞ்செய்திருக்கின்றனர். இலஞ்சிக் குமாரர்கோவில் திருமூலத்தானத்துச் சிலாவிக்கிரக மூர்த்தியைத் தமது குடும்பத்தாருடன் கலந்துபெருக்கியசெல்வத்தால் அழகுறப்பணிவித்தளித்திருக்கின்றனர். அன்றியும் அவ்விலஞ்சியில் கீழ்தரக்கலாசாலை (மிடில் ஸ்கூல்) ஒன்று தமது பெயரால் நீடூழி நிலவ உறுதிபெறப் பணிசெய்து கொடுத்திருக்கின்றனர். இவையொப்ப இக்காலத்தும் என்னாலெழுதப்பட்டிருக்கின்ற இப் பாண்டியராஜ வம்ச சரித்திரத்தையும் அச்சிடுவதற்கு வேண்டும் திரவியங்களையுங் கைம்மாறு கருதாது தந்துதவி இம்மை மறுமைக்குரிய பயன்களெல்லாவற்றையும் இனிதினெய்துவாராயினர்.

இத்தகைய வண்மையாளரின் சிறப்பும், செல்வமும், வண்மையும், தரும சிந்தனையும், வாழ்க்கையும், மரபும், ஆயுளும் மேன்மேலுந் தழைத்தோங்கும் வண்ணம் எல்லாம் வல்ல கடவுளை எப்பொழுதும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கின்றனம்.

இங்ஙனம்,

நூலாசிரியர்.



இலஞ்சி,

J. S. இராமசாமியா பிள்ளை அவர்கள்.

# பாண்டியராஜ வம்ச சரித்திரம்.

## (இரண்டாம் பகுதி.)

## இடைப்பட்ட பாண்டியர்.

### 28-வது

### சோழன்தலைகொண்ட வீரபாண்டியன்.

சோழன் முதலாவது பராந்தகனாலும் அவன் மக்களாலும் ஒடுக்கப்பட்டுப்போன பாண்டியன் மூன்றாவது ராஜசிம்மனுக்குப்பிறகு, இப்பாண்டியன் வெளிப்பட்டனன். இவனுக்கும் ராஜசிம்மனுக்குமுள்ள பாந்தவ்யமொன்றும் விளங்கவில்லை. என்றாலும் இவன் அவனது பரம்பரையே யாவன் என்பதற் கையமில்லை யென்பர்.

இவ்வீரபாண்டியன் பாலப்பருவம் நீங்கி யௌவன தசையை அடைந்தபின்பிறகு, தனது முன்னோர்களின் மேன்மைகளையும் வீரச்செயல்களையும் இடைப்பட்ட சில ஆண்டுகளா யவர்கள் அடைந்த தாழ்மைகளையும் கேட்டறிந்து சிலகாலம்வரை ஒன்றும் தோன்றாதவனாயிருந்துவிட்டுப், பிறகு ஒருவாறு தெளிவடைந்தவனாய் மீண்டும் பாண்டியராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் சோழராஜ்யத்தை அடியோடு தொலைத்துப்போடவுங் கருதி, அதற்குவேண்டும்படைபலங்களையெல்லாம் சன்னத்தம்செய்யலானான். பழமைபாராட்டித் தமிழ்நாடுகளிலுள்ள சில சிற்றரசர்களைத்துணைவேண்ட, அவர்களும் அதற்கிசைந்தனர்போலும். இவ்வாறாகப் பாண்டியன் சேனைகளைக் குறைவில்லாதபடி சேர்த்துக்கொண்டு,

முதற்கண் பாண்டியநாட்டின் தென்பாகத்திலுள்ள திருநெல்வேலியைச்சார்ந்த சிலஊர்களைத் தன்வசப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். இவனைப்பற்றியசிலாசாசனங்கள் இவ்விடங்களில் விசேஷமாய்க் காணப் படுகின்றமையால், இங்கு இவ்வாறு துணியநேர்ந்தது. இங்கிருந்துகொண்டே இப்பாண்டியன் வடக்கே வெகுதூரம் வியாபித்திருப்பவனாகவுந் தெரிகின்றான்.

நெல்லையையோ வேறெந்த ஊரையோ தனக்கிருப்பிடமாகக்கொண்டே இவ்வீரபாண்டியன், தான்சிங்காதனமேறிய நாலாவது ஆண்டில் தென்பாண்டிநாட்டிலுள்ள சில தேவாலயங்களுக்குச் சிலகாலபூஜைகள் நடந்தேறிவர விளைநிலங்களை விட்டுக்கொடுத்ததற்குச்சிலாசாசனங்களை நிலைநாட்டியிருக்கின்றனன். வரவரச் சேனைகளையுஞ்சேர்த்துக்கொண்டிருந்தான். பாண்டிநாட்டுப் பழங்குடிகளும் இவனுக்குப் பெரிதுந் துணைபுரிந்திருக்கவேண்டுமென்றுந் தெரிகின்றது.

இவன்செய்தி இவ்வாறாக, சோழநாட்டில் சோழன் பராந்தகன்காலஞ்செல்ல அவன் மக்கள் இராஜாதித்தன் கண்டராதித்தன், அரிஞ்சயன், கோதண்டராமனாகிய ஆதித்தன் என்ற நால்வரில்; மூத்தவன் நீங்கலாக மற்றைய மூவரும் ஒருவர்பின் னொருவராய் அரசியற்றிவந்தனர். இவர்கள் காலமுங் கழிந்துவிட, மூன்றாமவனாகிய அரிஞ்சயன்மகன் இரண்டாவது பராந்தகசோழன் பட்டத்துக்கு வந்தான். இவனுக்குச் சுந்தரசோழன் எனவும்பெயருண்டு. இச்சோழன், வீரபாண்டியனது நடபடியைக்கேட்டதும் வெகுகோபங்கொண்டு பெருத்தசேனையுடன் சேவூர் என்னுமிடத்திற் பாண்டியனை எதிர்த்தான். இருவேந்தருக்குஞ் சேனைகள்

மிக்கிருந்ததால் இச்சண்டை வெகுபலமாய் நடந்திருக்க வேண்டும். இரத்தப்பெருக்கும் அலையடித்தோடியிருக்க வேண்டும். முடிவில் வீரபாண்டியனே வீராவேசத்துடனெழுந்து, அந்தச்சுந்தரசோழன் தலையைவெட்டிக் கையிலெடுத்து, அப்படுகளத்தின் நடுவில் பந்துபோலுருட்டிச் சிங்கநாதஞ்செய்தான். இப்படிச்செய்தது முதல் இவனைச் "சோழன்தலைகொண்ட வீரபாண்டியன்" என உலகத்தவர் அழைக்கலாயினர். பிறகிவன் தன்முன்னோர்பதியாகியமதுரையையுங் கைக்கொள்ளத்துணிந்தான். இந்நிகழ்ச்சியெல்லாம் கி-பி 960-க்குமேல் 970-க்குட்பட்டிருக்கவேண்டுமெனத் தெரிகின்றது. சுந்தரசோழன், இந்திரன் உலகம்புகவே கண்டராதித்தன் மகனான மதுராந்தகன் என்பவன் சோழநாட்டிற் சிங்காதனமேறினான். அப்பொழுது சுந்தரசோழனின் முதல் மகனாகிய இரண்டாவதாதித்தன் இளவரசாக்கப்பட்டான். இவ்விள அரசனுக்கு வயது பதினாறளவே என்பர். இவன் "தனது தகப்பன் தலையைப்படுகளத்திற் பந்துபோலுருட்டின பாண்டியன் தலையைக்கொய்து அப்படிப் பந்துபோலுருட்டினாலன்றி அமைவதில்லை" என்று தீர்மானித்தவனாய்ப், பட்டத்துவேந்தனிடம் தனது எண்ணத்தைவிளம்ப, அவனும் அவனிஷ்டப்படியே செய்யவேண்டி, பலபலிஷ்டர்களான சேனைத்தலைவர்களையும் சேனைகளையும் நல்க, ஆதித்தனும் படைகள் புடைநெருங்கிவர வீரபாண்டியனிருக்குமிடத்தை அடுத்தான். பாண்டியனும் பலமான சேனையுடன் ஆதித்தனை எதிர்த்தான். இருபடைகளுங் கடும்போர்செய்யலாயின. சோழன் இளையனாயினும், போருக்குச்சிறிதுமிளையாதவனாய்வெகுசாமார்த்தியமாகச்சண்டையை நடத்திவந்

தான், இப்போர் சிலபகல்நடந்திருக்கவேண்டும். முன் இப்பாண்டியனுக்குத்துணைபுரிவதாய் வாக்களித்தபடி இலங்கைவேந்தனாகிய "உதயன்" என்பானும் சிலசேனைகளை யனுப்ப, அப்படைகளும் தக்கசமயத்தில் வந்துசேர்ந்து கொண்டன. ஆதித்தனுக்கும் அவன் நாட்டிலிருந்து, அணியணியாகச்சேனைகள் வந்தவண்ணமாயிருந்தன. இச்செரு இன்னுஞ்சிலகாலம் நடந்திருக்கவேண்டும். வரவரப்பாண்டியன் படைப்பெருக்கங் குன்றலாயது. படைத்தலைவரிலும் சிலர்மாய்ந்தனர். எஞ்சியசேனைகளும் இரணகளத்தைவிட்டு ஓட்டமெடுத்தன. வீரபாண்டியனும் உயிருடன்மீளும் நெறியைநாடலாயினன். இதுதெரிந்த ஆதித்தன், பாண்டியனை எங்கும் மறைந்தோடாதபடி வழிமறிக்கச்செய்து, வாளாயுதத்தை வீசிக்கொண்டே அவனைஅடுத்து, தகப்பன்தலையை வெட்டினஅவனுடைய சென்னியை யாவருங்காண அறுத்து அக்களத்திலுருட்டிப் பழிக்குப்பழி வாங்கியபின்னரே மனத்தின்கண் அமைதிகொண்டனன். பாண்டியனுடைய ஆனைக்கூட்டங்களையெல்லாம் இவன்போர்முகத்தில் அதஞ்செய்தனனாதலின் இவனுக்குக் கரிகாலன் என்றபெயரும் வழங்கலாயது.

அப்பால் ஆதித்தகரிகாலன் அந்த வீரபாண்டியனுக்குள்ள நாடுகளையெல்லாந் தன்வசப்படுத்திக்கொண்டான். மதுரையைத்தன்னுளுகைக்குள்ளாக்கினான். பிறகு சோழன், வீரபாண்டியனுக்குதவிசெய்த சிங்களவேந்தனை வெல்ல ஓர் தளகர்த்தனுடன்சிலசேனைகளை யனுப்ப, அவர்களும் இலங்கையிற்புகுந்து உதயன்சேனையை முறிய அடித்து, முன்ராஜசிம்மபாண்டியனால் வைக்கப்பட்டிருந்த கிரீடங்களையும்

அணிகலங்களையு மெடுத்துக்கொண்டதுமன்றி அத் தீவைக் கொள்ளையிட்டு மீண்டனர்.

இந்த வீரபாண்டியனைப்பற்றிய சாசனங்கள் காஞ்சில் நாட்டுப்பக்கங்களிலும், அம்பாசமுத்திரம், நெல்லை, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான இடங்களிலு மிருக்கின்றன.

---

## 29-வது பாண்டியன் அமரபுஜங்கன்.*

சோழன்தலைகொண்ட வீரபாண்டியனுக்குப் பிறகு "அமரபுஜங்கன்" என்னும் பாண்டியன் தலையெடுத்தான். இவன் மதுரையைத் தலைநகராகக்கொண்டிருந்தானென்று சொல்ல இயலாது. வீரபாண்டியன்காலத்திலேயே அந்நகர் பராதீனப்பட்டுவிட்டதல்லவா? அமரபுஜங்கன் எவ்விடத்திலேயோ இருந்து சிலசேனைகளைச்சேர்த்துக்கொண்டு சேரனுடன் நட்புற்றிருந்தனனென்றறியப்படுகின்றது. நேசப்பான்மையோடிருந்தஇவ்விருவேந்தரும் சோழனுக்குக்கீழ்ப்பட்டிருத்தல் அவமானமெனக்கருதி அவனைவெல்லற்குரிய நோக்கத்துடன் சேனைகளையும் மற்றும்வேண்டுங் கருவிகளையுஞ் சித்தஞ்செய்து கொண்டிருந்தனர். இவரிப்படி இருத்தலைச் சோழனறிந்திருந்தும், இவர்பகை அற்பமெனமதித்து அசட்டையாயிருந்து விட்டான். சிலகாலஞ்செல்ல, பாண்டியனுஞ் சேரனும் சோழனுக்குக்கொடுக்கும் திறையைக்

---

* சோழன் முதலாவது இராஜராஜன் மெய்க்கீர்த்தி "......தொழுதக விளங்கும் யாண்டே செழுயரைத்தேசு கொண்..." எனக் கூறுதலை இங்கு அறியத்தக்கது. செழியன் என்னுது செழியர் என்றதால், இந்த அமரபுஜங்கனோடு வேறுசில பாண்டியரும் இச்சோழனால்வெல்லப்பட்டிருக்கவேண்டுமென ஊகிக்கவுமிடமாகிறது.

கொடாது மறுக்கலாயினர். மறுக்கவே, சோழன்முதலாவது இராஜராஜன், பெரும்படைகளுடன்வந்து இவர்களைஜெயித்து இவர்க்குரிய நாடுநகரங்களையும் நிதிகளையும் கைக்கொண்டான். அபகரித்த அணிகலங்களையும் பொன்னணயங்களையும் பல ஆலயங்களுக்களித்தனன்.

இந்தராஜராஜன் அரசாட்சிமுதற்கொண்டு இந்தப்பாண்டியநாடுஇராஜராஜபாண்டியநாடெனச்சாசனங்களில்வழங்கத்தொடங்கியது. இந்த இராஜராஜன்சாசனங்கள் பாண்டியநாட்டிற் பெரும்பாலும் வட்டெழுத்திலும் சோழநாட்டில் அந்நாட்டெழுத்திலுங் காணப்படுகின்றன. இவன் காலம் கி-பி 995 என்பர்.

---

### 30-வது பாண்டியன் ஸ்ரீவல்லபன்.

இந்தஸ்ரீவல்லபபாண்டியனைப்பற்றிவிசேஷமாயொன்றுந் தெரியவில்லை, இவன்காலத்தில் சோழநாட்டை ஆண்டிருந்தவன், முதலாவது இராஜராஜசோழன் மகன் முதலாவது ராஜேந்திர சோழன். இவன் கி-பி 1011ல சிங்காதனமேறினன். இயற்கையி லிவன் மகாபுத்திசாலி. நிரம்பிய கல்விமான். இரணசூரனுமாவன். இவன்படையெடுத்துத் தனது தந்தையால் வென்றுகொண்டநாடுகளோடு வடக்கிலும், தெற்கிலுமுள்ள பலநாடுகளையும் ஜெயித்துத் தனது ஆளுகைக் குட்படுத்திக்கொண்டான். எறத்தாழப்பனிவரை முதல் கன்னிக்கடல்வரையுள்ளநாடுகளும், ஈழமண்டலமும், பர்மாவுங்கூட இவன் ஆளுகைக்குட்பட்டிருந்தனவாகத் தெரிகின்றது. கங்காதீர்த்தம் நிரப்பிய குடம் ஒன்றை* ஓர் பகையரசன் தலையிலேற்றித்தன் நாட்டிற்குக் கொணர்ந்தமையால் இவனைக் கங்கைகொண்ட சோழனென்றும் சொல்

---

* இப்பகையரசனை வடநாட்டு வேந்தனாகிய மகிபாலன் என்பர்.

வார்கள். இதற்கறிகுறிபாய் இவன்சோழநாட்டில் கெங்கை கொண்ட சோழீச்சுரம் என்ற ஓர் ஊரைக் கட்டுவித்து அங்கோர் ஆலயமும் பணிவித்து அதில் பிரதிஷ்டிக்கப்பட்ட மகா இலிங்கத்துக்குக் கெங்கைகொண்ட சோழீச்சுவரர் எனவும் பெயர்சாத்தியிருக்கின்றனன். பாண்டியநாட்டிலும் சித்திராநதி தீரத்தில் "கெங்கைகொண்டான்" என்ற ஊரை இவனே நிர்மித்தானென்பர்.

இந்த இராஜேந்திரன் சார்வபௌமனாய் வீற்றிருக்கும் போது பாண்டியமன்னன் எவ்வாறு தலைஎடுப்பன்? பாண்டி நாடுமுழுவதும் சோழபூபதியின் பிரதிநிதிகளாலேயே ஆளப் பட்டுவந்தன. இக்காலத்தவனான, ஸ்ரீவல்லபன் இந்தஇரா ஜேந்திரனுக்குக் கீழ்ப்பட்டவனாகவே இருந்திருக்கவேண்டு மேயன்றி, சுதந்தரமுள்ளவனாயிருந்தானென்று சொல்லுதற் கிடமில்லை. இன்னும் சிலபாண்டியர்களும் இந்த ஸ்ரீவல்ல பன்கூட இருந்தனரெனவுந்தெரிகின்றது.

---

## 31-வது பாண்டியன் மானாபரணன். 32-வதுவீரகேரளன் 33-வது சுந்தரபாண்டியன்.

---

இந்த மூன்று பாண்டியர்களும் ஒரேகாலத்தவராகத் தெரிகின்றனர். இவர் நாடிழந்து, சோழவேந்தர் பிரதிநிதி களின் கீழ்ப்பட்டவராய் வாழும்பொழுதே வஞ்சகமான பணிவொழுக்கங்களால் அப்பிரதிநிதிகளை மயக்குவித்துச்சிற் றரசருக்குள்ள நிலைமையை யடைந்துகொண்டனர். மேலும் இம்மூவரும் தம்முள் பகைகொள்ளாது நேசப்பான்மையை

வளர்த்துவந்தனர். சிலவருடங்கள்செல்ல இவர்கள் சிறிது பிரபலமுற்றுத்தங்கள்பெயர்விளங்கவும், நாட்டுக்குடிகள் தம்மீது பிரியஞ்செலுத்தவுமாகச்சில காரியங்களைச் செய்துமுடித்தனர்.

*பாண்டியன் மானுபரணன்:*— மானமே தனக்கு ஆபரணமாகக்கொண்டவன் என்ற பெயர்ப்பொருளுக்கேற்பச் சோழன் கட்டுப்பாட்டினின்றும் நீங்கிப் பாண்டிய ராஜ்யாதிபத்தியஞ்செய்ய நினைத்துக் குடிமக்களும் பிரபுக்களுந்தன்னை மதிக்கவும், செல்வாக்குடையவனாகவும் விரும்பிப்பாண்டிய நாட்டிலுள்ளபொருநை நதியின் தென்பாலில் ஓர் ஊரைப் புதிதாகக்கட்டி அதற்குத்தன் பெயர்விளங்க "மானுபரண நல்லூர்" எனப்பெயரிட்டுப் பலவருணத்தாரையும்குடியேற்றினான். இவ்வூர் இப்பொழுது "மானுபாநல்லூர்"எனவழங்குகிறது. இஃதன்றி வேறுசில அனுகூலமான செயல்களையும் இவன்செய்திருக்கிறான். இதனால் பாண்டி நாட்டின் தென்பாகத்திலுள்ள பலஊர்ஜனங்களும் இப்பாண்டியன் சொற்படிகேட்டு நடக்கத் தலைப்பட்டனர்.

*பாண்டியன் வீரகேரளன்:*- இவன் மானுபரணனைப் பின்பற்றினான். பாண்டியநாட்டில் சித்திராநதி தீரத்தில் ஓர் ஊரைப்பணிவித்து அதற்கு "வீரகேரளபுரம்" எனத்தன் பெயரைச்சூட்டி, ஊர்நடுவில் ஸ்ரீகண்ணபிரான் கோவிலையும் சிலபரிவாரதேவதைகளையும், கிராமாங்கமான தெய்வங்களையும் பிரதிஷ்டைசெய்வித்து, பிராம்மணர்முதல் பலஜாதியாரையும் ஆங்கிருக்கச்செய்தான். இவ்வூர் இப்பொழுது "வீரகேரளம்புதூர்" என வழங்குகின்றதென்னலாம். இவ்வூரை அடுத்தமிகப்பெரியகுளமும் அதன்கீழ்ப்பட்ட நிலங்களும்,

அவைகளையடுத்த "வீராணம்" என்ற சிற்றூரும் இவனாலே ஏற்படுத்தப்பட்டன என்பர். இவன் இப்படியெல்லாஞ் செய்து அங்குள்ளாரைத் தன் வசப்படுத்திக்கொண்டான்.

சுந்தரபாண்டியன்:— இவன் தன் பெயர் நீடூழி நிலவத் தென்காசித்தாலூகாவில் சித்ரா நதிக்கு வடபால் "சுந்தரபாண்டியபுரம்" என்றவோர் ஊரைப் பணிவித்து, குடிஜனங்கள் சம்பிரமமாய் வாழ்வதற்கான சில நீர் நிலைகளையும் அதன் கீழ் விளைநிலங்களையும் திருந்தச்செய்திருக்கின்றனன். இவையன்றியும், ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு வடமேற்கு மூலையிலிருக்கிற "சுந்தரபாண்டியம்" என்ற ஊரும் இவனாலேயே பிரதிஷ்டிக்கப்பட்டதென்பர். இப்படியெல்லாஞ் செய்து இவனும் அங்குள்ளவர்களுக்கு ஓர் தலைமையெய்தினன்.

இவ்வண்ணம் தங்கள் பெயரை ஊழிகாலம் வரை நிலைக்கச்செய்த இவர்கள் ஒரு காலத்தில் ஒன்று கூடி, சோழனை வெல்வதற்குரிய யோஜனைகளைச் செய்யலாயினர். முடிவில் அம்மூவரும் புனனுடனுடன் போராடத்தொடங்கினர். ஏதோ தங்களாற் சேகரிக்கக்கூடிய சேனைகளைச் சேர்த்துக் கொண்டு சோழன் பிரதிநிதியைச் சூழ்ந்து கொண்டனர். இது விஷயத்தைச் சிறிது முன்னமேயறிந்து கொண்ட பிரதிநிதி, தனது அரசனுக்கு அவ்விஷயத்தையறிவித்தலும், சோழன் முதலாவது இராஜாதி ராஜன் ஓர் பெருஞ்சேனை புறஞ்சூழ விரைந்துவந்து பாண்டியனுடன் போர்தொடங்கினன். சிறிது பொழுதிற் பாண்டியர் மூவர் படைகளும் புறங்காட்டியோட அவர்கள் அகப்பட்டுக்கொண்டனர். சோழவேந்தன்,

* மானுபரணனின் முடிபுனைந்த தலையை அடியற வெட்டி, வீழ்த்தினன். வீரகேரளனைப் பிடித்துக் களத்திலிட்டுத் தனது "தந்தி வாரணம்" என்னும் பட்டத்து யானையால் மிதித்துத் துகைக்கும்படி செய்தான்.

இப்படி இவ்விருவரும் இறக்கவே, சுந்தரபாண்டியன் ஒருவரும் அறியாது தனது இருப்பிடமாகிய முல்லையூரில் ஓடி ஒளிந்துகொண்டான். அது தெரிந்த இராஜாதி ராஜன் படையுடன் அம்முல்லையூரை முற்றுகையிட்டான். இடவே பாண்டியன் வெளிப்பட்டுப் போர் முகத்தில் தனது சேனைகளைச் செலுத்தினன். பயன் படவில்லை. பிறகவன் அரியணையும், மதிக்குடையும், மணி முடியுமிழந்து உடல் நடுங்கக் கால் தள்ளாட யுத்த களத்தை யடுத்துச் சோழ மன்னவனின் முன்னிலையில் தலைகுனிந்து நிற்பானாயினன். அது கண்டதும் சோழன் மனமிரங்கி அவனை ஆதரித்தானென்பர். இவ்விஷயமெல்லாம் கி. பி. 1020 ன் மேல் 1030-க்குள் நடந்திருக்கவேண்டும்.

## வெண்பா.

வேண்டிய போதின்பம் விளைக்கு மடந்தயரைத்
தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே - பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகலநின்று
சொல்லக் கடவவெல்லாஞ் சொல்.

இப்பாடல் இச்சுந்தரபாண்டியனை விளக்குவதென்னலாம்.

(தனிப்பாடற்றிரட்டு.)

---

* "மானுபரணன் முதலான மூன்று பாண்டியர்களையும் இராஜாதிராஜ சோழன் வென்றான். என்ற விஷயத்தைக் கீழ் வரும் இச்சோழன் மெய்க்கீர்த்தி நன்கு விளக்குகின்றது.

## 34-வது பராக்கிரமபாண்டியன். 35-வது குலசேகர பாண்டியன். 36-வது வீரபாண்டியன். 37-வது விக்கிரமபாண்டியன்.

மானுபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகிய இம்மூன்று பாண்டியர்களின் காலத்துக்குப் பிறகு, பாண்டிய இராஜ வம்சம் பலவிநமாய்ச்சின்னபின்னப்பட்டுத் தாழ்மையுற்றது. சந்ததிகளெல்லாம் சோழர்களுக் கடிமைப் பட்டுவிட்டன. உயர்வற உயர்ந்த மதிக்குலக் கொழுந்துகளுக்கும் இவ்வண்ணம் வாடி வதங்கும்படியான காலமொன்றேற்பட்டது வினைப்பயனேயன்றோ? கேவலம் பஞ்ச காலத்தில் இளைத்து வருந்தும் எளிய குடும்பத்தைப்போல் பாண்டியர் பரம்பரையும் ஏறத்தாழ நூறு வருடங்கள் வரை கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததாகத் தெரிகின்றது.

இப்படிப்பட்டுக்கொண்டிருந்த கஷ்டமெல்லாம் ஒருவாறு நீங்கிவிடக் கடவுள் கிருபையால் பாண்டிய வம்சத்

---

* "...தென்னவர் மூவருள் மானுபரணன் பொன்முடி ஆனைப் - பருமணிப் பசுந்தலை பொருகளத்தரிந்து - வாரளவியகழல் வீரகேரளனை - முனைவயிற்பிடித்துத் தந்திவாரணக் - கதக்களிற்றுனைதைப்பித்தருளி- அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தரபாண்டியன்-கொற்ற வெண் குடையுங்கற்றைவெண் கவரியும் - சிங்காதனமும் வெங்களத்திழந்துதன் - முடிவிழத்தலைவிரித் தடிதளர்ந்தோடத் - தொல்லை முல்லையூர்த் துரத்தி ஒல்கவில்..."

துக்கு நற்காலமடுப்பதான அறிகுறியொன்று தோன்றிற்று. அது தான் யாதோ எனின்; சோழராஜ சந்ததியாரின் உட் கலகமே. இக்கலகம் சாமான்யமாயிருக்கவில்லை. அடுத்தவரும் அகன்றவருமான தாயாதிகள் பல வகுப்பினராய்ப் பிரிந்து அரசுக்கும், அதிகாரத்துக்கும் மனத்துட் பகைத்து வாய்ச்சண்டை தொடுத்துக் கைக்கலகத்துக்கும் எத்தனஞ் செய்துவிட்டனர். அதனால் பட்டத்திலிருந்த அரசன் ஆளுகையின்மேல் அத்துணைக்கருத்துச்செலுத்தமுடியாதவனாய்ப் போய் விட்டான். ஆங்காங்குள்ள பிரதிநிதிகளும் அச்சிரத்தையாயிருந்து விட்டனர். எங்கும் ஆட்சிமுறை தவற, உள் நாடுகளிற் கலகங்களேற்பட்டன. இவ்வண்ணம் நாடுகள் தாங்கு தரிப்பின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கையில் பாண்டியபரம்பரை அடிமைத்தனத்தினின்றும் பையவெளிப் பட்டது. இப்படி வெளிப்பட்ட பாண்டியரிருவர். அவரே பராக்கிரமபாண்டியன், குலசேகரபாண்டியன் எனபவர்.

இவ்விருவரும் தாங்கள் வதிந்த நாடுகளிலுள்ள குறும்பர்களையும், பெருங்குடித்தனக்காரர்களையும் நயந்து வேண்டி அவர்களுதவியாற் கிடைத்த சேனைகளோடு வேறு படைகளையுஞ் சேர்த்துக்கொண்டு, மதுரையிலிருந்த சோழன் பிரதிநிதியை அடித்து விரட்டினர். அப்பால் பாண்டியன் பராக்கிரமன், மூத்தவனாக இருந்த படியால் அவன் சிங்காதனமேற எத்தனிக்கையில் குலசேகரபாண்டியன் அவனைத்தடுத்துத்தானே மகுடம் புனைய வேண்டுமென, அவ்விருவருக்குங் கலகமேற்பட்டது. முடிவில் பராக்கிரமனே பல சிற்றரசர்களின் உதவியைப்பெற்று அரியணைமேலமர்ந்து அரசு செலுத்தி வரலானான். அது பொறாத குலசேகரன், சோழன்

முதலான பல அரசர்களின் உதவியாற்பெற்ற சேனையோடு வந்து மதுரையை வளைந்து போர் தொடங்கினன். பராக்கிரமன் சேனைகள், வெகு சுருக்கமாயிருந்தபடியால் அவை பயந்தோடி ஒளிக்கலாயின. பராக்கிரமனும் இரவே மனைவி மக்களுடன் மதுரையினின்றும் வெளிப்பட்டுக் கிழக்கடற் கரையையடைந்து ஆங்கோர் ஊரில் மறைந்திருந்தான். வர வரக் குலசேகரன் ஆட்சி பலப்பட்டுக்கொண்டு வந்தது.

மறைவுற்றிருந்த பராக்கிரமன் தனக்கு அத்தியந்தம் நேசனான இலங்கைப்பராக்கிரமபாகு என்பானுக்கு, தனக்கு நேர்ந்துள்ள துன்பங்களையும், அவை நீங்கப் படைத்துணை செய்ய வேண்டுமென்ற விபரங்களையும் வெகு விஸ்தாரமாய் விளங்க ஓர் லிகிதம் வரைந்து ஆள் வசம் அனுப்பினன். அதனை இலங்கை வேந்தன் பார்வையிட்டுத் தனது அன்பனுக்கு வந்த ஆபத்துக்காக அகமிக வருந்தினன். பிறகு, அவன் தன்னுடைய சேனைத்தலைவருள் முதன்மையானவனும், மகா பராக்கிரமசாலியுமான இலங்காபுரி என்பவனை அழைத்து " நீ இப்பொழுதே பல்லாயிரக்கணக்கான படைகளுடன் பாண்டி நாட்டிற் சென்று அங்கு அரசிருக்குங்குலசேகரனைக் கொலைசெய்து நமது நண்பனான பராக்கிரமனைச் சிங்காதனத்திற் சிறப்ப வீற்றிருக்கச்செய்ய வேண்டும். நாம் கூறிய வண்ணம் செய்து முடிக்காவிடில் நீ இங்குவரத் தேவையில்லை," எனக் கடுமையான ஆக்கினையிட, அவனும் அவ்வாறே செய்வதாய்ப் பிரதிக்கினை செய்துவிட்டுப் படைகளுடன் புறப்பட்டுச் சிலகாவதஞ் சென்றான். செல்லுங்கையில் பாண்டிய நாட்டிலிருந்துவந்த ஒரு தூதன் " பாண்டியன் பராக்கிரமனையும் அவனுடைய பெண்டு பிள்ளைகளையுங் குல

சேகர பாண்டியன் கொன்று விட்டான்," என்று இலங்காபுரியிடத்திலியம்ப, அதனைக்கேட்டதும் அத்தலைவன் மனமழிந்து அச்சமாசாரத்தைத் தனது மன்னவனுக்கு ஆள் வசமறிவித்தான். நட்டவன் பட்டதைக்கேட்டதும் அச்சிங்களவேந்தன் பட்டபாட்டுக்கோர் அளவில்லை. பிறகு அவன் அதி கோபாவேசங்கொண்டு "அக்குலசேகரனைக் குடும்பத்துடன் அதஞ்செய்து, பராக்கிரமனுக்குப் பந்துவாயுள்ள எவருக்காவது பாண்டிய ராஜ்ய பட்டாபிஷேகஞ்செய்து வைத்தே நீ மீளல் வேண்டும்" எனக் கண்டிப்பான உத்திரவொன்றை அப்படைத்தலைவனுக்கனுப்பினான். அது கண்ட தலைவனும் தண்டுடன் தடங்கடல் கடந்து பாண்டி நாட்டின் கரையையடுக்கையில், குலசேகர பாண்டியனால் அனுப்பப்பட்டிருந்த சேனைகள் சண்டைக்குத் தயாராயிருப்பதைத் தெரிந்து பகற்பொழுதிற் கரையிலிறங்காது படகுகளிலேயே இருந்து விட்டு, இரவானதும் சேனையுடன் தானும் கரை சேர்ந்தனன். உடனே போர் தொடங்கியது, இருபடைகளும கைகலந்தன. சிங்களத்தலைவன் வெகு சாமர்த்தியமாய்ப் பொருதுபாண்டியன் படையிற் பாதியளவு கொன்று குவித்து விட்டனன். மற்றையப்பாதிப் படைகளும் பயந்தோடிவிட்டன. அப்பாலத்தலைவன் அங்கிருந்துகொண்டே பாண்டியனாற் போர்செய்ய அனுப்பப்பட்ட வடவலத்து நாகநாடாள்வான் முதலான ஐந்து தலைவரோடு பல தமிழ்வீரர்களையும் வென்று இராமேசுரத்தையுங் கைப்பற்றிக் கொண்டான். அங்கிருந்து கொண்டே இவன் வேறு பல யுத்தங்களுஞ் செய்திருக்கின்றான். சிலமேகன், நரசிங்கப் பிரமாதிராயன் முதலானவர்களையும் ஜெயித்திருக்கின்றான்.

அப்பாலிவன் குண்டுகலா என்னுமிடத்திற்சென்று அங்கே உன்னதமான மூன்று கோட்டைகளையும் அகழிகளையும்பணிவித்து அவ்வூருக்குத்தனது அரசன் பெயரையே சாத்தினன். அதாவது "பராக்கிரமபுரம்" என்று பெயரிட்டான். அவ்விடத்திலிருந்து கடக்குடைராயர் முதலிய வீரர்களை ஜெயித்தான். இவையெல்லாங் கேள்விப்பட்ட குலசேகரபாண்டியன் தனக்குக்கீழ்ப்பட்ட சிற்றரசர்களாகிய சுந்தரபாண்டியன், பாண்டியாதிராஜன் என்பவர்களைப் படையுடன் சென்று சிங்களத்தலைவனை எதிர்க்கும்படி ஏவ, அவர்களும் விரைந்து சென்று மூன்று முறை யுத்தஞ்செய்தும் முடிவில் இளைத்து முதுகு காட்டி ஓடிவிட்டனர். பிறகு இலங்காபுரி பலஊர்களையும் தனக்குள்ளாக்கிக்கொண்டான். பல மறக்குல வீரர்களையும் வென்று தன் சைன்யத்துடன் சேர்த்துக்கொண்டான். வீரகங்கை என்ற ஊரை நோக்கிச் சென்று அந்த இடங்களையெல்லாந்தீக்கிரையாக்கி, மீண்டும் பராக்கிரமபுரத்துக்கு வருகையில், போர் செய்யக் காத்துக் கொண்டிருந்த ஆளவந்தானென்பானைப் படையுடன் அந்தகன் ஊருக்கனுப்பினன். வடலி என்ற இடத்திலும் யுத்தம் நடந்திருக்கின்றது.

இப்படி இலங்கைச் சேனதிபதி சென்ற இடமெல்லாம் ஜெயம்பெற்று மீண்டுகொண்டிருத்தலைக்கண்ட குலசேகரன், "இனித்தலைவர்களை அனுப்புவதிற்பிரயோஜனமில்லை"யென்று நினைத்துத் தானே தன்னுடைய மதுரைச்சேனையோடு திருநெல்வேலி முதலான விடங்களிலுள்ள நிலைப்படைகளையுந் தன்னுடைய தாய் மாமனனுப்பிய பெரும்படைகளையும் ஒரு சேரத்திரட்டிக்கொண்டான். உபபலமாக மாவடி ராயர் முத

லான முப்பத்திரண்டு தலைவர்களும் படையுடன் வந்து சேர அவர்களையுமுடன் சேர்த்துக்கொண்டான். இப்படியிவன் அலைகடலேயென்னும்படி அளவிறந்த சேனைகளுடன் பராக் கிரமபுரத்தை யடுத்தான். இதுகண்ட இலங்காபுரியும் கலங் காத நெஞ்சுடையவனுபப்பாண்டியன்படையைச் சேனையுட னெதிர்த்தான். இருதிறப்படைகளுங் கைகலந்தன. கண் டவர் அஞ்சிக் கண்புதைக்கும்படியான இக்கடும் போரை "அபாரமான பாரதப்போரே ஒக்குமென்று அங்குள்ளவர் பேசிக்கொண்டனர்" என்பர். சில பொழுதிற் பிணங்கள் மலைபோற்குவிந்தன. அதிலிருந்து வரும் இரத்தம் ஆறுகள் போல் அலைவீசி விரைந்தன. அதிபயங்கரமான இந்த யுத் தம் முப்பத்து மூன்று நாள் வரை நடந்தது. ஒவ்வொரு நாளும் பாண்டியர்பக்கமே தோல்விநேர்ந்தது. முடிவில் சிங் களத்தலைவனே ஜெயம்பெற்றனன். தோற்ற பாண்டியன்குல சேகரனும் சிலதலைவர்களும் புறங்காட்டி யோடலாயினர். இப்படியோடுவாரைச் சிங்களவீரர் பின்தொடர்ந்து விரட்டி னர். பிறகும் மற்றோரிடத்தில் பாண்டியன், பலதலைமைக் காரருடனும் படையுடனும் வந்து இலங்கைச்சேனைத்தலை வனை எதிர்த்தான். அங்கும் வெகுகடுமையான போரொன்று நடந்தது. அப்போரிலும் பாண்டியன்படைகளில் முக்காற் பங்கு மாய்ந்தன. தலைமைக்காரர்பலரும் இறந்தனர். குலசே கரனும் கொலையுண்பதற்கஞ்சிப்பின் வாங்கியோடிவிட்டான்.

அப்பால் சிங்களப்படைத்தலைவன் எரிகாவூரை எரிக்கி ரையாக்கித்தேவிபட்டணத்தைப்பிடித்துக்கொண்டான். அப் பால் அவ்விடங்களிலுள்ள அடங்கார்ஊர்களையெல்லாம்அன லில்வேவித்தான். குண்டநிகா என்னுமூரிலிருந்துகொண்டு

அநேகம் பாண்டியத்தலைமைக்காரர்களைத் தனக்குக்கீழ்ப்படியும்படிசெய்துகொண்டான். அப்பாலும்பலவூர்களிற்சண்டையிட்டு வெற்றிகொண்டு நெட்டூரையுந்தனக்குள்ளாக்கி அங்குஞ்சிலநாள் தங்கியிருந்தான். பிறகவன் வந்தகாரியத்தை முடிக்கக்கருதிப் பாண்டியன் குலசேகரனுக்குப் பயந்து பொதிகை மலைச்சாரலில் மறைந்துறையும் பராக்கிரமபாண்டியனின் சந்ததியான "வீரபாண்டியன்" என்பவனை அழைத்து வரும்படி ஆளனுப்பினான். மீண்டுமவன், பாண்டிநாட்டிலுஞ் சோள நாட்டிலுந் தொண்டை நாட்டிலுமுள்ள பல சிற்றரசர்களையும் அடக்கிச் சென்னபட்டணம் வரையுஞ் சென்று, அவ்விடங்களில் தான் வென்று கொண்ட ஊர்களையெல்லாம் தன்னை வந்து வணங்கிய மாளவ சக்கரவர்த்திக்கு வழங்கினான். பிறகு அவ்விடம் விட்டு மீண்டும் நெட்டூரில் வந்து சேர்ந்தான். இப்படியெல்லாம் நிகழ்கையில், இலங்கை வேந்தன், இலங்காபுரிக்குத் துணைபுரிய "ஜெகத் விஜயன்" என்னுந் தலைவனைச் சேனையுடன் அனுப்ப அவனும் இலங்காபுரியுடன் கலந்துகொண்டான். இவ்விருவருஞ்சேர்ந்திருக்கும் பொழுது, முன் தோற்றோடின குலசேகர பாண்டியன் மீண்டும் பலமான சேனைகளைத் திரட்டிக்கொண்டு இவருடன் சண்டை தொடங்கினான். இச்சண்டையிலும் பாண்டியன் படைகளையெல்லாம் பறிகொடுத்துத் தோற்றுத்தொண்டைமானுக்குட் புகுந்தொளித்தான். அப்பால் சிங்களச்சேனாதிபதியர் அங்குப் பலபதிகளையும் தமதடிப்படுத்தி மதுராபுரி வந்து சேர்ந்தனர். முன் நெட்டூரிலிருந்து அனுப்பிக்கப்பட்ட தூதனும் பாண்டியவம்சத்தவனான வீரபாண்டியனைக் கூட்டி வந்தான். இத்தருணம் இலங்கை வேந்தன், "பராக்கிரம பாண்டியன் சந்ததிக்கு வெகு கோலாகலமாய்ப் பட்

டாபிஷேக விசேஷத்தை நடத்தல் வேண்டும்" என்றோர் உத்தரவனுப்பினன். அதனைக்கண்டதும் தலைவரிருவரும் பருவம் வாய்ந்த பிள்ளையான வீரபாண்டியனை வாசநீராட்டிச் சிங்கஞ்சுமந்த மணியணைமேலேற்றி நவரத்தினகசிதமாய் விளங்காநின்ற கிரீடத்தை அவன் தலைமேற் சூட்டினர். இக்காலத்தில் பாண்டி நாட்டார் கொண்ட களிப்புக் கோரெல்லை இல்லை.

இவ்வாறாக, தொண்டைமான் கோட்டையிலிருந்து குலசேகரன், ஆங்கோர் சைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு பக்கத்திலுள்ள சில ஊர்களைக் கைவசப்படுத்திச் சாந்தனேரிக் கோட்டையைப் பிடித்தான். இலங்காபுரியோ சில படைகளுடன் பாண்டி நாட்டின் மேற்குப்பக்கத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான ஊர்களைக் கைப்பற்றிக்கொண்டு குலசேகரனிருக்குஞ் சாந்தனேரியை நோக்கிச்சென்றான். அப்பொழுது ஜெகத்விஜயனும் அவனுடன் வந்து சேர்ந்தான். இவ்விருவரும் வருதலைக்கேள்விப்பட்ட குலசேகரன் படையுடன் தெற்கே நோக்கிப்புறப்பட்டுப் பாளையங்கோட்டைக்கு வந்து அவ்வூரைத் தனதாக்கிக்கொண்டிருக்கையில், ஈழநாட்டுத்தலைவர் அங்கும் வர, பாண்டியன் நடுநடுங்கிச் சேனையுடன் விரைந்து குறுக்கு நெறியாகப் பாண்டி நாட்டைக்கடந்து சோளநாட்டிற்புகுந்தான். இலங்கை வீரர் இவனைத்தொடர்ந்தும் பிடிக்க முடியாது போயினர். புனல் நாடு புகுந்த பாண்டியன், அங்கிருந்த சோழனிடம் சரணம் புக, சோழனுமவனுக்குதவியாகச் சிலசேனைகளை நல்கினன். அச்சேனைகளையும் சேர்த்துக்கொண்ட பாண்டியன் தொண்டியையும் அதன் பக்கத்திலுள்ள சில கிராமங்களையும் தன் வசப்படுத்திக்கொண்டான். ஈழத்துத்தலைவர் பாண்டியனுக்கு

தவிசெய்த சோழனைஎதிர்த்து அவனுக்குரிய வடமண், மேற்குடி, மணமேற்குடி, மஞ்சங்குடி முதலான ஊர்களைத் தீயிட்டெரித்துத், தொண்டிக்குச்செல்ல நினைக்கையில், குலசேகரன் அமராபதி என்னும் ஊரில் வந்திருத்தலைத் தெரிந்து, அங்கு வந்து அவனுடன் செருச்செய்யத் தொடங்கினர் இச்சண்டை சில நாள் வரை வெகு கொடூரமாய் நடந்தது பாண்டியனுடன் சோழனும் சேரனுஞ் சேர்ந்துகொண்டனர். அதனால் இலங்கைத் தலைவர் சிறிது தோல்வியுற்றனர். சில பொழுது செல்ல முடிவில் தமிழ் மூவேந்தருமே முதுகு காட்டி ஓடலாயினர். குலசேகரன் ஒளித்தோடிப் போய் விட்டான்.

**வீரபாண்டியன்:—** இப்போர் முடிவுற்றதும், இலங்காபுரியும் ஜெகத்விஜயனும் மதுரைக்குவந்து தாங்கள் பிடித்த நாடுகளையெல்லாம் வீரபாண்டியனுக்கே கொடுத்து வேண்டும் ராஜ தந்திரங்களையுமவனுக்குக் கற்பித்து, "தம் நாட்டு நாணயமாகிய காகபாணு நாணயமே பாண்டி நாட்டில் வழங்க வேண்டும்" எனத்திட்டஞ்செய்து, அப்பாண்டியனால் உபசரிக்கப்பெற்று இலங்கைக்கு மீண்டு அரசனை வணங்கித் தாங்கள் பாண்டி முதலான நாடுகளிற் காட்டிய வீரச்செயல்களையும், வீரபாண்டியனை அரியணை ஏற்றிய வைபவங்களையும், பிறவும் விளங்க விண்ணப்பஞ்செய்தனர். இவையெல்லாங் கேட்ட இலங்கை வேந்தனும் அகமிகமகிழ்ந்து, அச்சேனைத் தலைவர்கள் மேல் முன்னினுமதிகமான அன்பைச் செலுத்தி பல பரிசுகளும் நல்கியனுப்பினன். பாண்டியில் தனக்கேற்பட்ட வெற்றிக்கறிகுறியாக, "பாண்டு விஜயகம்" என்ற ஓர் ஊரை அவ்வீழமண்டலத்திலேயே பணிவித்துப்பிராமணர்களுக்கு,

தானஞ்செய்தான். இவையெல்லாம் நடந்த காலம் கி. பி 1167-68 ஆகலாம்.

மதுரையில் வீரபாண்டியன் அரசாட்சி மேன்மேலுந் தழைத்தோங்கிக்கொண்டிருந்ததென்றாலும், சோழன்மூன்றாவது குலோத்துங்கன் விரோதமிதுவரையிவனுக்கொழுந்திலது. சில குறும்பர்களும் இவனிடத்தில்உட்பகை கொண்டிருந்தனர். அடிக்கடி சோழவேந்தன் யுத்தத்துக்கு வருவதுந் தோற்பதும் ஜெயிப்பதுமாயிருந்தான். இவ்விரு வேந்தரும் ஒருவரையொருவர் வெல்லக்காலம் பார்த்திருந்தனர். இப்படியிருக்கையில் ஓடிப்போன குலசேகர பாண்டியனிறந்தான்.

விக்கிரமபாண்டியன்:— காலஞ் சென்ற குலசேகர பாண்டியன் மகனாகிய, விக்கிரமபாண்டியன் என்பவன், சோழமன்னவனை அடுத்துப் படைத்துணை செய்ய வேண்டினான் சோழனுக்கு வீரபாண்டியன் மேற் பழைய பகையுமிருத்தலால், அவன் விக்கிரமபாண்டியன் சேனையோடுதன்னுடைய சேனைகளையுஞ் சேர்த்துக்கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டான். இதுதெரிந்த வீரபாண்டியன் மீண்டும் ஈழநாட்டு மன்னவன் துணையைவேண்ட, அவனும் முன் அனுப்பிய இலங்காபுரி, ஜெகத்விஜயன் என்பவர், காலஞ்சென்றுவிட்ட காரணத்தாலோ? வேறு யாது காரணத்தாலோ? வேறு சில சேனைத்தலைவரைச் சேனையுடன் அனுப்பினன். இவர்களும் விரைந்துவந்து பாண்டியன் படையுடன் சேர்ந்துகொண்டனர். சோளபாண்டியர் சேனையும் மதுரையை அடுத்தது. சண்டையுமூண்டது. சிலநாள்வரை இப்போர் அயுக்திகிரமாய் நடந்து முடிவில் வீரபாண்டியன் தோற்த

றோடிவிட்டான். அவன் படைகளும் பலவாறு பட்டெழிந்தன. அவனுக்குத் துணையாக வந்த, * ஈழநாட்டுப் படைத் தலைவர்களும் மூக்கரியப்பட்டனர். மூக்கிழந்து மூளியான இவர்கள், மானம் பொறுக்காது மறிகடலிற் பாய்ந்து மாய்ந்தனர். இவர் சேனைகளும் பலவிதமாயழிவுற்றன. வீரபாண்டியன் மகனுமிச்சண்டையிலிறந்து விட்டனன்.

இந்த யுத்தமிவ்வாறானவுடன் விக்கிரமபாண்டியன் மதுரையிற் சிங்காதனமேறினான். சோழமன்னவனாகிய மூன்றாங் குலோத்துங்கன் இப்பாண்டியனுக்குப்பிராணபதமான சிநேகிதனாயிருந்தான். அவனே இப்பாண்டியனைப் பாதுகாத்து வரலானான். விக்கிரமபாண்டியனும் நீதிவழுவாது செங்கோல் செலுத்தி வந்தான். தன் கிழ்ப்பட்ட குடிகளுக்கும் குறும்பர்களுக்கும் பலவிதயான நன்மைகளையுஞ் செய்து கொண்டிருந்தான். இதனால் பல நாட்டு ஜெனங்களுமிப் பாண்டியனைப் புகழலாயினர். இப்படியிருக்கையில் தோற்றோடிய வீரபாண்டியன், தானே இலங்கையிற் சென்று, பராக்கிரமபாகுவைக்கண்டு, தனக்குச்சோழனால்வந்த கெடுதிகளையெல்லாஞ்சொல்லி, மூன்றுமுறையுமவனுதவியை வேண்டினான். இலங்கையர்கோனுஞ்சிலசேனைகளைத் தலைவர்களுடன்அனுப்ப அவர்களைஅழைத்துக்கொண்டு வீரபாண்டியன

---

* "... விக்கிரமபாண்டியன் வேண்டி விட்ட தண்டால் - வீர பாண்டியன் மகன் பட எழகம் - படமறப்படை படச்சிங்களப்படை மூக்கு—அறுப்புண்டு அலைகடல் புக வீரபாண்டியனை—முதுகிடும்படி தாக்கி மதுரையும் அரசுங்கொண்டு — ஜயஸ்தம்பம் நட்டு அம்மதுரையுமரசும் நாடும் — அடைந்த பாண்டியற்களித்தருளி ..." இச்சாசனம் 3வது குலோத்துங்கனது.

கடல்கடந்து மதுரையை நோக்கிவந்துகொண்டிருக்கையில், இவன் வருகையை முன்னமேதெரிந்து, சோழனும்பாண்டியனும் அனுப்பியிருந்த ஓர் பெருஞ்சேனை, வீரபாண்டியனையும் மற்றுமுள்ளபடைகளையும் படைத்தலைவர்களையும், வழிமறித்துப்போர்செய்து, அவர்களைவெட்டி வீழ்த்தின. இது தெரிந்த பாண்டிநாடெல்லாம் மகிழ்வுற்றன. விக்கிரமபாண்டியன் நிச்சிந்தையாய் ராஜரீகஞ்செலுத்தலானான். இவை பெரும்பாலும் மஹாவம்சத்தை ஆதாரமாகக்கொண்டு வரையப்பட்டன.

---

## 38-வது ஜடாவர்மன் குலசேகரபாண்டியன் 1-வது

---

இவன் கி-பி 1190-ம் வருஷத்தில் சிங்காதனமேறி 25 வருஷங்கள்வரை அரசுசெலுத்தியிருக்கிறான். இரண்டுநூற்றுண்டுகளாகச் சோழபூபதிகளால் ஒடுக்கப்பட்டுச்சிதைந்துபோனதின்பிறகு தலையெடுத்தபாண்டியன் இவனே. இவன் பட்டம் பெறுதற்குச்சில்லாண்டுகளுக்குமுன்னிருந்தசோழ அரசர்கள், தமதுமுன்னோர்தேடிக்கொண்ட மெய்க்கீர்த்திகளையெல்லாம்தாம்சூடிக்கொண்டும், அதிகாரத்தாலும், செல்வத்தாலும், செருக்குற்றுத்தங்களுக்கு இனிமேற் சத்துருக்கள் தலையெடுக்கப்போவதில்லை யென்றிருமாந்துமிருந்ததன்றிக்குடித்தும், கூடாநெறியிலின்பந்துய்த்தும் வந்தமையால் அவர்தம் பிரதிநிதிகளே அரசகாரியங்களைக்கவனிக்கும்படி நேர்ந்துவிட்டது. அப்பிரதிநிதிகளும் அரசாது நிலைமையை

யறிந்து தேசக்ஷேமங்களைக்கவனிப்பதிற்பெரிதும் அசட்டை காட்டிவந்தனர். இப்படியாகவே குடிகளுக்கு அரசன்மேல திருப்தியேற்பட்டது. சிற்றரசர்களும், பேரரசனின் பலஹீனத்தைத்தெரிந்துகொண்டு ஓரிடத்திற் கூடி தாம்செலுத்துந் திறையைமறுக்கவுந்தீர்மானித்துக்கொண்டனர். இரண்டொருகுறும்பர்மாத்திரம் இக்கூட்டத்திற்சேரவில்லை. இந்நிலையில் இந்தஜடாவர்மன் குலசேகரன் மதுரையிலிருந்து இராஜரிகம் நடத்திவரலானான். இவனைப்பற்றிய ஓர்சாசனம் கூறுவதாவது:—

"ஸ்வஸ்தி ஸ்ரீபூவின் கிழத்திமேவி வீற்றிருப்ப, மேதினிமாது நீதியிற்புணர, வயப்போர்மடைந்தை ஜெயப்புயத்திருப்ப, மாக்கலைமடைந்தை வாக்கினில் விளங்க, திசைஇருநான்கும் இசைநிலாவெறிப்ப, மறைநெறிவளர, மனுநெறிதிகழ, அறநெறிச்சமயங்களாறுந்தழைப்ப, கானவேங்கையைவில்லுடன் துரந்து, மீனங்கனகாசனத்துவீற்றிருப்ப, எண்கிரிசூழ்ந்த எழுகடலெழுபொழில், வெண்குடைநீழலிற் செங்கோல் நடப்பக், கொடுங்கலிநடுங்கி நெடும்பிலத்தொளிப்ப, வில்லவர், செம்பியர், விராடர், கனடவர், பல்லவர்திறையுடன் முறைமுறைபணிய, இருநேமியளவும் ஒருநேமியோங்க, இன்னமுதாகிய இயலிசைநாடகம், மன்னிவளரமணிமுடிசூடி, வீரசிம்மாசனத்துவீற் றிருந்தருளிய, ஸ்ரீகோச்சடையபன்மரானதிரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டுமூன்றுவது, நாள்இரண்டாயிரத்து எழுநூற்றைம்பத்திரண்டு, மதுரோதயவளநாட்டு மாடக்குளக்கீழ் மதுரைக்கோயில் பள்ளியறைக்கூடத்துப்பள்ளிப் பீடம், காலிங்கராயனிலெழுந்தருளியிருந்துகீழவேம்புநாட்டுத்திருநெல்வேலி...."

இம்மெய்க்கீர்த்தியிற்கண்டபடி இப்பாண்டியன் வில்லவர், செம்பியர், விராடர், கர்னடர், பல்லவர், முதலானவேந்தர்களை வென்றானென்பதற்கு ஆதாரங்கள் வேறின்மையாலும், வெல்லப்பட்ட வேந்தர்களின் பெயர்களும், ஊர்களும் விளங்கக்கூறப்படாமையாலும் இவன் இவ்வெற்றிகளைப் பெற்றிருப்பானென்பது சந்தேகமே. இவன் மூவகைத் தமிழையும்,அகச்சமயம் ஆறையும், அறத்துறைகளையும், மனு முறையையும் நல்லவண்ணம் பரிபாலித்துவந்திருக்கலாம். இவன்பண்டைப்பாண்டியர்கள்போலமதுரையைஇராஜதானியாகக்கொண்டு தெற்கே குமரி, கிழக்கே கடல், மேற்கும் வடக்குமாகச்சில காவதங்கள், எல்லையாகவுள்ள இடங்களைக் கைக்கொண்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது, மதுரைப்பதி இவனுடைகையில் வந்துவிட்டதாகத் தெரிவதால், சோளவேந்தரின் நிலைமை குன்றியிருக்க வேண்டுமென்றுகிறது. இவனது சிங்காசனத்தின் பெயர் காலிங்கராயனென்பது. இவனிறப்பதற்கு முன்னேயே மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1-வது பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும்.

இவன் சிவசமயத்தவனே என்றாலும் பிறமதங்களில், துவேஷமற்றவன். நீதிமான். தமிழை வளர்த்தவன். ஆராய்ந்தவன். தர்மசிந்தையுள்ளவன். சிவாலயங்களுக்கு விளைநிலங்களைத் திறையின்றி மானியமாக விட்டுக்கொடுத்திருக்கின்றான். தோத்திரப்பிரியனென்றுந்தெரிகின்றான். இவன்பிறந்த நக்ஷத்திரம் "விசாகமெ"ன்று தெரிகிறது இவனதுமெய்க்கீர்த்தி "பூவின்கிழத்தி"என்றே ஆரம்பிக்கப்பட்டதாயிருக்கிறது.

39-வது மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1-வது

இவன் மகா பராக்கிரமசாலி. கி. பி. 1216ல் மதுரையம்பதியில் சிங்காசனமேறினன், ஏறின காலம் முதல் தனது மூதா

V2111 N30 85890



தையர்களைப் பல்லாண்டுகளாக ஓரிடத்திலும் நிற்கத்தரிக்க வொட்டாமல் விரட்டியடித்தும், மதுரையினழகு அழியக் கொள்ளைகொண்டும், இன்னும் பலவிதமான இன்னல்களை நாடுநகரங்களுக்கிழைத்தும் வந்த சோழயன் குலத்தை வெல்லும் காலத்தை எதிர்பார்த்திருந்தான். இப்பாண்டியன் காலத்தில் தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு அரசுவீற்றிருந்தவன் மூன்றாவது இராஜஇராஜன் இவனும் ஒருவீரனே. என்றாலும் முன்னோர்வென்று சேர்த்த நாட்டின் விரிவால் வரும் செல்வச்செருக்கோடு படைப்பெருக்கால் ஏற்பட்ட மமதையுங் கொண்டிருந்தானாகையால், பகையரசர்களின் பலாபலங்களை ஆராய்வதிற் கருத்தைச் செலுத்தாதிருந்துவிட்டனன். இவன் இப்படியிருத்தலைச் சுந்தரபாண்டியனறிந்து அச்சோழன்படையிலும் மூன்றுபங்கு அதிகமாகச் சேனைகளைப் பெருக்கிக்கொண்டு தக்கவேளையில் உத்தரம் நோக்கிப்புறப்பட்டான். ஆயிரக்கணக்கான யானைகளும், குதிரைகளும் உடன்சென்றன. இதனைத்தெரிந்தசோழனும் தனக்குத்துணையாகச் சிலசிற்றரசர்களைப்படையுடன் தருவித்துக்கொண்டு சண்டைக்கு முந்தினான். இருதிறப்படைகளுந் தஞ்சையிலேயே கைகலந்தன. சிலபொழுதுசெல்லப் பாண்டியன் சேனைகள் சோழன்படையை முனைமுகத்தில் நிற்கவொட்டாதபடி அடித்தும், குத்தியும், வெட்டியும், கால்மாடு தலைமாடாகச் சாய்க்கத்தொடங்கின. யானைக்கூட்டங்களும், குதிரைப்பந்திகளும் சோழவேந்தன் சேனைகளைத் துகைத்து நிணச் சேறாக்கின. சோழனுக்குத் துணையாகவந்த குறும்பர்களிற் கொலையுண்டவர்போக மற்றுமுள்ளவர்கள் மானமழிய ஓடிஒளித்தனர். சேனைகள் அழியவே, புனனாடனும் புறங்காட்டிக் காட்டைநோக்கி ஓட்டமெடுத்தான்.

இங்ஙனம் பகைவர் ஒழிபவே பாண்டியன், படைகளை ஏவி அந்தத் தஞ்சையைத் திக்கிரையாக்கினன். சாம்பராய்க் கிடந்த அப்பட்டணத்தை அவ்வளவோடு விட்டுவிடாமல், கோட்டை கொத்தளங்களையும், உயர்ந்த மாடமாளிகை கூடகோபுரங்கள், மண்டபங்கள், ஆடரங்கு முதலான கட்டிடங்களையும் தூள்எழும்ப இடித்துத்தரைமட்டமாக்கினன். பிறகு, அவ்விடங்களையெல்லாம் மிகவும் இழிவுதோன்றக் கழுதையைக்கட்டி உழுவித்தனன் கருநீல முதலிய புஷ்பங்களால் அழகுமிக்கிருந்த தடாகங்களையும், ஆறுகளையும் உபயோகப்படாவண்ணம் சேறுகுழம்பக் கலக்கியழித்தனன். இப்படி இவன் செய்யவே அங்கிருந்த வீரர்களின் மனைவியர் யாவரும் தமது குமாரரையுங் கணவரையுங்காணுது மார்பிலும் வயிற்றிலு மடித்துக்கொண்டு அழுதகண்ணீர் ஆருயோடக் கதறலாயினர். இவ்வாறு நகரம் அதலகுதலப்பட்டுக் கொண்டிருக்குங்காலத்தில், தன்னையடுத்துத் தான்விளைவிக்கும் வெற்றிப் பிரதாபங்களைப்பற்றிப்பாடிக்கொண்டிருந்த பாணர்களுக்கு அப்பொழுது பிடிபட்டிருந்த வேந்தர்களின் கிரீடங்களைப்பிடுங்கிப் பரிசாகக்கொடுத்தனன். அத் தஞ்சை மாநகரைப் பஞ்சும்படாத பாடனைத்தையும் படும்படி செய்வித்ததின்பிறகு பாண்டியன், அத்யுன்னதமாயும் ஆடகப் புரிசையுடன் கூடியதாயும் விளங்காநின்ற ஆயிரத்தளி யென்னும் பெயரையுடைய சோழபூபதியின் அபிஷேகமண்டபத்திற் புகுந்து வீராபிஷேகஞ் செய்துகொண்டு வெற்றிப்பறை முழங்க அங்குநின்றும் வெளிப்பட்டு அலங்கரிக்கப்பட்ட அசலம்போன்ற ஓர் மத்தகஜத்தின் மேலாரோகணித்து, அலை கடலன்னப்படைக்குலங்கள் புடைபெயர வடதிசைநோக்கி வழிக்கொண்டான். செல்லும் நெறியெல்லாம் பிரஜை

களாலும்,பிரபுக்களாலும், உபசரிக்கப்பெற்று,மெய்மையான வேதங்களில் வல்ல அந்தணர்களுக்கு உறைவிடமாகிய தெய்வத்தன்மைவாய்ந்த புலியூர் என்னும் சிதம்பர க்ஷேத்திரத்திற்புகுந்து ஆங்குக்கனகசபையில் ஸ்ரீ சிவகாமிநாச்சியார் கண்ணாரக்கண்டு களிக்குமாறு திருநடனஞ் செய்தருளும் ஸ்ரீ நடராஜப்பெருமானது மங்களகரமான திருமேனியைக் கண்டுகளித்து, மாலயனாலும் அறியப்படாத அக்கடவுளின் திருவடிகளைச்சேவித்து அங்கோர் பூங்கமலவாவியாற் சூழப்பெற்று உயர் மேருவைப்போல் ஒளிவீசிக்கொண்டிருக்கும் அத்தாணி மண்டபத்துட் பிரவேசித்து,ஆங்குக்கொலுவிருந்தனன். இருக்கையில், அந்நாட்டிலுள்ள சிலபெரியோர் "பாண்டியனைக்கண்டு வாழ்த்தி, சோழமன் குலத்தின் பெருமைகளை எடுத்துச்சொல்லி, இவ்வருமையான அரசபரம்பரை அடியற்றுப்போகாதபடி தோற்றோடின சோழபூபதிக்குத் தொன்மைபோல் அரசுரிமையை நல்கிப் புகழ்விரித்தல்வேண்டு"மெனக்கேட்டுக்கொள்ள, வள்ளலாகியசுந்தரபாண்டியனும் அவ்வாறே செய்பலானன்,

களத்தைவிட்டுக் கனலெரியும் காடுகள் பல கடந்து ஓர் மலைச்சாரலில் ஒன்றியாய்க்குன்றி உயிர் பிழைத்திருந்த சோழன் இராஜராஜனைச் சிலத்தூதர் சென்று பாண்டியன் வாக்களித்ததைப் பகர்ந்துஅழைத்துவா, அவனும் மனத்துயர் நீங்கித்தஞ்சைவந்து தனது மனைவியையும், மக்களையும் அழைத்துக்கொண்டு தில்லையிலெய்திப் பாண்டியன் சமுகத்தையடுத்துவணங்கித் தன்னொருபுதல்வனை இருகையாலேந்தி எதிரில் நீட்டி நின்று, " ஓ! மதிக்குலமன்னர் பெருமானே! இதோ இந்தக்குழந்தைக்கு உன்னுடைய பெயரையே இட்

டழைப்பேன். இழந்த அரசும், ஆயுளும் அளித்து என்னைப் புரக்கவேண்டுகின்றேன்" என்று இருகண்களிலும் நீர்ததும்ப இரக்கமொழி பலதொடுத்து, அரியணையின் கிழ் வீழ்ந்து வணங்கிஎழுந்து நின்றனன். இவையெல்லாங்கண்டதும் அந்தச் சுந்தரபாண்டியன் அந்தரங்கம் கருணைமயமாக மாறிவிட்டது. விடவே அவன் அச்சோழனை நோக்கி, "அஞ்சற்க" என அபயமளித்து நாட்டை விட்டுக் காடு சென்ற வருத்தமெல்லாம் அச்சோழனை விட்டு நீங்குமாறு அவனுக்குப்பண்டிழந்தசோழபதியென்ற நாமமும், சோழநாடும், தொன்முறையில்வந்த கிரீடமும் மீனஇலச்சினை பொறித்ததிருமுகத்துடன் உதகதாராபூர்வமாக நல்கி, "நீ சென்று நீதி செலுத்துக" என்று ஆக்கினையிடலும், சோழன் அவனிடத்தில் விடை கொண்டு தஞ்சையில் மீண்டும் எய்தி அரசு வீற்றிருப்பானாயினன். சுந்தரபாண்டியனால் தஞ்சைநகாழிவுற்றது போல் உறையூருமழிவுற்றதெனத் தெரிகின்றது.

அப்பால் சுந்தரபாண்டியன் கொங்கணர், கலிங்கர், கோசலர், மாளவர், சிங்களர், தெலுங்கர், சீனர், கூர்ஜரர், வில்லவர், மாகதர், விக்கலர், செம்பியர், பல்லவர், முதலிய அரசர்களையும் வென்று, அவரது நாடுகளையுங் கைக்கொண்டானென்று சாசனங்கள் கூறுகின்றன. இன்னணம் பல அரசர்களையும் வென்று திறைகொண்டு, ஜெயபேரிகை முழங்க, மதுரையில் மீண்டனன். சிலகாலஞ்செல்லச் சோழன் தனக்குவந்த அவமானத்தைப் பொறுக்காது நன்றி மறந்தவனாய்த் தன்னையொத்த சில அரசர்களைச்சேர்த்துக் கொண்டு சுந்தரபாண்டியனது உத்தரவுக்குக் கீழ்ப்படியாமலும், திறைசெலுத்தாமலும், செருக்குற்றுப் போர்செய்வ

தற்கும் எத்தனஞ் செய்துகொண்டிருந்தான். இஃதறிந்த பாண்டியன் மீண்டும் சோழநாட்டின்மேற் படையெடுத்துச் சென்று தனதுதூசிப்படையாலேயே சோழனொடு, மற்றைய வேந்தர்தம் படைகளையும் இரணகளத்திற் படுவித்து அரசர்களையும் ஆரண்யம்புக ஓட்டி. வெற்றிக்கொடிநாட்டி, ஆங்குள்ள முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிஷேகஞ்செய்து கொண்டான். அந்நாடுகளனைத்தையும் தன்னுளுகைக்குட்படுத்திக்கொண்டான். அல்லாமலுமிவன், வடக்கண்சென்று வடபுலத்தரசர்களையும் வென்று இமயத்திலும் கயற்கொடி பொறித்தனனென்றும் சாசனங்கள மொழிகின்றன. இவ்வாறு ஹிமசேதுபர்ியந்தமுள்ள நாடுகளையெல்லாம் தனக்குரிமையாக்கிக்கொண்டு வெற்றிப்பறையும், சங்கமும் விருதுமொழிகளும் முழங்க மதுரைக்கு மீண்டு பொன்னுலாகிய ஸ்தூபிகளால் பொலிவுபெற்று விளங்கிய இராஜமாளிகையிற் புகுந்து ஆங்குள்ள மழவராயனென்ற பீடத்தின்மேல் உலகமுழுதுடையாளென்னும் மனைவியுடன் கொலுவீற்றிருப்பதாயினன்.

மூன்றுவது இராஜசிம்மன் காலந்தொட்டுப் பலவிதமாய்ச் சிதறுண்டுபோன பாண்டிய இராஜவம்சம் ஜடாவர்மன் குலசேகரபாண்டியனுற் சிறிது மேன்மை நிலைக்குத் திரும்பி, அவ்வாறே இப்பாண்டியன் காலத்தில் மஹோன்னததசையில் வரலாயது. இச்சுந்தரபாண்டியன் மகாவீரனென்பதிற் சந்தேகமில்லை. இவன், மெய்க்கீர்த்தியிற் கூறியிருக்கிறபடி, வடபுலவேந்தர்களை வென்றிருந்தாலு மிருக்கலாம். படைப்பெருக்கம் இவனுக்கிருந்ததுபோல் அக்காலத்தில் வேறொரு வேந்தர்க்கும் இருந்ததாக நினைக்கஇடமில்லை.

இவன், யாரிடத்திலுங் கருணைசெலுத்தப்பட்டவன், வரையாதுகொடுக்கும் வள்ளன்மையுள்ளான். இவன் பெயர் சுந்தரபாண்டியனென்பது. இவன் சோழநாட்டை வென்று கொண்ட காலத்தில் "சோணாடுகொண்ட சுந்தரபாண்டியன்" என்றும், அதனைச் சோழனுக்கு மீளஅளித்தகாலத்தில், "சோணாடுவழங்கிய சுந்தரபாண்டியன்" என்றும், அங்ஙனம் அளித்த நாட்டை மீளக்கவர்ந்து வெற்றிக்கொடி நாட்டிய காலத்தில் "சோணாடுகொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகங் கொண்டருளிய சுந்தரபாண்டியன்" எனவும் பெயர்கள் புனைந்திருக்கின்றான். இவன், சிறுபருவமுதற் கொண்டே வெகுபுராதன காலத்திலிருந்த தனது முன்னோரைப்போல் வெற்றிப்பிரதாபமுள்ளவனாக விளங்கவேண்டுமெனக்கருதி அதற்குரிய சாதனங்களையெல்லாஞ் சித்தஞ் செய்துகொண்டு தக்கபருவம் வாய்த்ததும் நினைத்தபடி முடித்திருக்கின்றான். இவனைப்பற்றிப்புலவர்கள்பாடியிருக்கவேண்டுமென்பது திண்ணமே. ஓர் பரணி மாலிகையும் இவனணிந்தானெனக் கூறுவதுமுண்டு. முத்தமிழையும், அத்தமிழாளிகளையும், நால்வகை வேதங்களையும், அவ்வேதங்கள்வல்லாரையும் நல்லவண்ணம் போஷித்திருக்கின்றான். இவன் செங்கோல் செலுத்திய காலத்தில் வர்ணாச்சிரமதர்மங்கள் சிறிதும் வரம்பு கடந்தில. கலியின்கொடுமை அணுவளவும் மேலாடியதில்லை. அகச்சமயங்களாறும் தகுமுறையிற்றிகழ்ந்தன. இவனது குடைக்கிழ்ப்பட்ட குடிமக்கள் யாவரும் களிமிக்கவராய் வாழ்வு படைத்துவந்திருக்கின்றனர்.

இவன் தென்னாட்டோடுவடநாடுகளிலுமுள்ள க்ஷேத்திரங்களுக்கு இறையிலியாக விட்டுக்கொடுத்த விளைநிலங்களும்,

சோலைகளும்பலவே. இவன்பிறந்த நாளாகிய புரட்டாதி மாசம் அவிட்ட நக்ஷத்திரத்தன்று விசேஷ பூசைகள் நடக்கும்படி பாண்டிநாட்டிலுள்ள திருவாலீசுவரம், திருநெல்வேலி முதலியவிடங்களிலுள்ள கோயில்களுக்கு நிலங்கள் மானிபமாகக்கொடுத்திருக்கின்றான். விளைநிலங்கள் பண்பட்டிராத ஊர்களிலுள்ள கோயில்களை, பொற்காசுகளைநெற்பொலிசைக்குக்கொடுத்து அந்தவருவாயாற் பரிபாலித்திருக்கின்றான். ஒவ்வொரு கோயிலிலுமுள்ள சிவப்பிராமணர், பரிசாரகர், வேதாத்தியானஞ்செய்பவர் முதலான பணிமக்களைநியமித்து அவர்களுக்கு மானிபமாக நிலங்களையும், சுவற்பமாதச்சம்பளங்களையும், மற்றுமுள்ள சுதந்தரங்களையும் நல்கியிருக்கின்றான். இவன் காலத்தில் தேவாலயங்களில் ஆறுகாலபூஜை நடந்துவந்ததாகத் தெரிகின்றது. இப்பூஜைகள் முறைதவறாது நடப்பித்துவரும் பொறுப்பைச் சில மடாதிபதிகளிடம் ஒப்பித்திருந்தானென்று சொல்லப்படுகிறது.

இவன்காலத்தில் நாணயம் "அச்சு" 25 அச்சுக்கு ஆறுமாதத்திற்கு வட்டிநெல் 30 கலமாக இருந்திருக்கிறது. இக்காசு பொற்காசே ஆகவேண்டும். இதற்குக் கீழ்ப்பட்ட நாணயம் பொன்னும், பணமும் துட்டுமாயிருத்தல்வேண்டும். நீட்டலளவு வேலிமுதலியன. நீட்டலளவைக் கோலும், முகந்தலளவைக்கருவியும் இவன்பெயராலேயே வழங்கிவந்தன. அதாவது, 'சுந்தரபாண்டியன்கோல்,' "சுந்தரபாண்டியன் மரக்கால்." இவனுக்குமுன்னிருந்த அரசர்கள் பெயராலும் மேற்படி கருவிகள் வழங்கிவந்தனவாகத் தெரிகின்றன. இந்தச் சுந்தரபாண்டியன் மதுரையேயன்றித் திருநெல்வேலியையுந் தனக்குத் தலைநகராகக்கொண்டிருக்கின்றான்.

காலம் சில செல்ல அரசிழந்த சோழன் இராஜராஜன், தனது உறவின் முறையவனான போசள நரசிம்மதேவனை யடுத்துத் தனக்கு மீண்டும் சோழநாட்டை யாளும் பதவி வாய்க்குமோவெனப் பிரலாபிக்க, அவ்வரசனும் அவனைத் தேற்றிப் பாண்டியனைப் படையால் வெல்வது அசாத்திய மெனக் கருதித் தண்டோபாயத்தைக் கைக்கொள்ளாமல், தான் காணவருவதாய்ச் சுந்தரபாண்டியனிடத்தில் ஓர் ஆளனுப்பித் தெரிவித்தான். பாண்டியனும் வர அநுமதித்தான். நரசிம்மதேவன் மதுரையில்வந்தவுடன் அவனைப் பாண்டியன் உபசரித்து, வந்தகாரியத்தை வினவ, போசளன், சோழன், நாடிழந்ததாற் பட்டபாடுகளையும், அவன் நன்றிமறிந்து மறுமுறையும்போருக்கெழுந்ததுமிகவும் மதியீனமேயாகுமென்ற விஷயத்தையும், விரிந்துரைத்து, மீண்டும் சோழனுக்கு அரசுரிமையை அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். அதற்குப்பாண்டியன், "முன்நன்றிமறந்தவன் பின்என்றுமே மறந்தொழிவான் ஆதலின் நான் அவனுக்கு நாடுகொடேன்" என்று மறுத்தான். பிறகு தந்திரசாலியானபோசளன், பாண்டியனை நோக்கி, "மன்னவரே! நீர் முன் சோழனுக்கு நாடளித்தது சம்மானமாக அல்ல. தானமாகவேகொடுத்திருக்கிறீர். அந்தத் தானமும் வாய்மொழியாய் மாத்திரமில்லை. உதகதாராபூர்வமாகவே கொடுத்திருக்கிறீர். இப்படிக்கொடுத்திருக்கிற பூமியை நீர் கையாளுவது நியாயமாகுமோ. 'கொடுத்ததை வாங்கக்காணேன்' என்பதையும் நீர் அறிவீரே" எனலும், பாண்டியன் அவ்விஷயமாய்ச்சிறிதுநேரம் யோசித்துப்பார்த்துவிட்டு,பாபத்துக்குப்பயந்தவனாய்ச்சில நிபந்தனைகளைமாத்திரம் ஏற்படுத்திக்கொண்டு, மீண்டும் சோழனுக்குச் சோழநாட்டைமாத்திரம் ஆண்டுவா அநுமதிகொடுத்தான்.

அதுமுதல் சோழன் மூன்றுவது இராஜராஜன், பாண்டியன் சுந்தரனுக்கஞ்சியே ஆளுகை செய்துவந்தான்.

இவைகளெல்லாம் ஊகிக்கப்பட்ட விஷயங்களேயன்றி வேறில்லை. பொதுவாய்ப் பாண்டியன் கொடுத்தே சோழன் இராஜராஜன் சோழநாட்டில் அரசு செலுத்திவந்தனன் என்பதற்கையமில்லை. சிலர், போசள நரசிம்மன் சோழநாட்டைப் பாண்டியனிடமிருந்து எப்படியோ மீட்டிச் சோழனுக்குக்கொடுத்து, "சோழராஜ்ய ஸ்தாபனுசாரியன்" எனப்பெயர்சூடினன் என்பர். இவையெல்லாம் கி. பி. 1222ல் நடந்திருக்கவேண்டுமென்பர்.

---

## திருநேல்வேலி நேல்லையப்பர் கோவில், சிலாசாஸனம்.

### மேற்படி மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1—வது மெய்க்கீர்த்தி.

---

பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப
நாமருவிய கலைமடந்தையும் ஜெயமடந்தையும் நலஞ்சிறப்ப
கோளார்ந்த கரும்புலியும் கொடுஞ்சிலையும் குலைந்தொளிப்ப
வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட
இருங்கடல் வலையத் தினிதறம் பெருக
கருங்கலி கடிந்து செங்கோல் நடப்ப
ஒருகுடை நீழலி லிருதலம்குளிர
மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க
நால்வகை வேதமும் நவின்றுடன் வளர

ஐவகை வேள்வியுஞ் செய்வகை யியற்ற
அறுவகைச்சமயமு மழகுடன் றிகழ
எழுவகைப்பாடலு மியலுடன் பரவ
எண்டிசை யளவுஞ் சக்கரஞ்செல்ல
கொங்கர், கலிங்கர், கோசலர், மாளவர்,
சிங்களர், தெலிங்கர், சீனர், கூர்ச்சரர்,
வில்லவர், மாகதர், விக்கலர், செம்பியர்,
பல்லவர் முதலிய பார்த்திவ ரெல்லாம்
உறைவிட மருளென ஒருவர் முன் னொருவர்
முறைமுறை கடவதந் திறைகொணர்ந்திறைஞ்ச
இலங்கொளி மணிமுடி இந்திரன் பூட்டிய
பொலங்கதி ராரம் யார்பினிற் பொலியப்
பனிமலர்த்தாமரைத் திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடி சூடி
பொன்னிசூழ் நாட்டுப் புலியாணை போயகலக்
கன்னிசூழ் நாட்டுக் கயலாணை கைவளர
வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையு முறந்தையும் செந்தழல் கொளுத்திக்
காவியும் நீலமும்நின் றுகவி னிழப்ப
ஆவியு மாறு மணிநீர் நலனழித்துக்
கூடமு மாமதிலுங் கோபுரமு மாடரங்கும்
மாடமும் மாளிகையும் மண்டபமும் பலவிடித்துத்
தொழுதவந் தடையா நிருபர்தந் தோகையர்
அழுதகண்ணீ ராறு பரப்பிக்
கழுதைகொண்டுழுது கவிடிவித்திச் செம்பியனைச்
சினம்பிரியப்பொருது சுரம்புகவோட்டிப்
பைம்பொன் மணிமுடிபறித்துப் பாணற்குக்கொடுத்தருளிப்

பாடருஞ்சிறப்பிற் பருதிவான்றோயும்
ஆடகப் புரிசை யாயிரத்தளியிற்
சோழ வளவன் அபிஷேக மண்டபத்து
வீராபி ஷேகம் பண்ணிப் புகழ்விரித்து
நாளும் பரராசர் நடுத்தலை பிடுங்கி
மீளும் தறுகண் மதயானை மேற்கொண்டு
நீராழி வையம் முழுதும் பொதுவொழித்த
கூராழியும் செய்யதோளுமே கொண்டுபோய்
ஐயப்படாத அருமறைதேரந் தணர் வாழ்
தெய்வப் புலியூர்த் திருவெல்லை யுட்புக்குப்
பொன்னம் பலம்பொலிய ஆடுவார் பூவையுடன்
மன்னும் திருமேனி கண்டு மனங்களித்துக்
கோலமலர் மேலயனும் குளிர்துழா யணிமாலும்
அறியா மலர்ச்சே வடிவணங்கி வாங்குசிறை
அன்னந் துயிலொழிய வண்டெழுப்பும் பூங்கமல
வாவி சூழ்பொன் னமரா பதிவொத்து
உலகந் தாங்கு முபர்மே ருவைக்கொணர்ந்து
வைத்தனைய சோதிமணிமண் டபத்திருந்து
சோலை மலிபுணர் சோணாடு தானிழந்த
தார்மாலையுமுடியும் தரவருக வென்றழைப்ப
மான நிலைகுலைய வாளகிரிக் கப்புறத்துப்
போன வளவனும் உரிமையோ டும்புகுந்து
பெற்ற புதல்வனைநின் பேரென்று முன்காட்டி
வெற்றி யரியணைக்கீழ் வீழ்ந்து தொழுதிரப்ப
கானோடி முன்னிகழ்ந்த வெம்மையெலாங் கையகலத்
தானோதகம் பண்ணித் தண்டார் முடியுடனே
விட்டபுகலிடந்தான் மாளிகைக்குத்திரிய—

விட்டபடிக்கென்றும் இதுபிடிபா டாகவெனப்
பொங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தொழவிளங்குஞ்
செங்கயல் கொண்டுன்றும் திருமுகமும் பண்டிழந்த
சோழபதி யென்னு நாமமுந் தொன்னகரும்
மீளவழங்கி விடைகொடுத்து விட்டருளி
வாகைக் கதிர்வேல் வடவேந்தர் தம்பாதம்
மேகந்தலையணிய வீரக்கழலணிந்து
விளங்கிய மணியணி வீரசிம்மாசனத்து
வளங்கெழுகவரி இருமருங் கசைப்ப
உலகமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய
கோமாறபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள்
சோணடு வழங்கியருளிய ஸ்ரீ சுந்தரபாண்
டிய தேவர்க்கு ... ... ... ...

---

## 40—வது ஜடாவர்மன் குலசேகரன் 2-வது.

இப்பாண்டியனுக்குரிய மெய்க்கீர்த்திமுற்கூறிப்போந்த முதலாவது மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியைச் சொல்லாலும், பொருளாலும் பெரும்பாலும் ஒத்திருப்பதால் இப்பாண்டியன் சுந்தரபாண்டியன்கூடவே பல போர்களிலுஞ் சென்று வெற்றி பெற்றிருக்கவேண்டுமென நினைக்கப்படுகின்முன். மேலும் அச்சுந்தரபாண்டியனுக்கு இவன் அடுத்த தாயாதிக்காரரின் சந்ததியாயிருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆனால், இவ்விருவேந்தரும் மனமொத்த நட்பினராய் வாழ்ந்துவந்திருக்கின்றனர். சுந்தரபாண்டியன் கி. பி. 1237-வரை அரசுசெலுத்தியிருக்கிமுன்.

இக்குலசேகரனே 1232ல் பட்டம் பெற்றிருக்கிறனெனத் துணியப்படுகின்றான். ஆகவே, சுந்தரபாண்டியன் ஆட்சிநாட் கடைசியில் இவன் சிங்காதன மேறியிருக்கின்றான். இத னால் சுந்தரபாண்டியன், தனக்குப்பந்துவாயும், ஆட்சியினும், அமரினும்,மற்றும்பலவிதங்களினும்உதவி செய்தவனுயுமுள்ள இந்தக்குலசேகரனுக்குத் தென்தமிழ் நாட்டில் ஏதோ ஒரு பாகத்தைக்கொடுத்துஅரசாளச்செய்திருக்கவேண்டுமென்று தெரிகின்றது. இக்குலசேகரனது தலைநகர் இன்னதெனத் துணிய முடியவில்லை. என்றாலும், இவனைப்பற்றிய ஓர் சாசனம்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ பூதலவனிதை ... ... ...

உலகமுழுதுடையாளோடு வீற்றிருந்தருளிய ஸ்ரீ கோச் சடையபன்மரான குலசேகரதேவர்க்கு யாண்டுமூன்றுவது நாள் ஐந்நூற்றுநாலு ... ... ...

நாஞ்சில்நாட்டுக் கோட்டாற்றுக்கோயிற்பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப்பீடம் மழவராயனில் எழுந்தருளினபடி உடையார் திருநெல்வேலி உடையார்க்கு நாம்பிறந்த விசா கத்து நாள்தோறும் சிறப்பாக அமுது செய்தருள. ..."

எனக்கூறிப்போதலால், இவனது தலைநகர் கோட்டாறு யிருக்கலாமென வூகிக்கலாம். இவன் அங்கிருந்துகொண்டே திருநெல்லைப்பிரானுக்குத் தனது ஜென்மநக்ஷத்திரமாகிய விசாகத்து நாள்தோறும் நீடூழி நடந்துவருமாறு சில வழி பாடுகள் ஏற்படுத்தி யிருக்கின்றான். திருநெல்வேலியும் இவ னுக்குத் தலைநகராகநினைக்க இடமுண்டு. மதுரை, சுந்தர பாண்டியனிருப்பிடமே. பாண்டி, சோளம், தொண்டை, கோளம் முதலான நாடுகளிலும் சுந்தரபாண்டியன் சாசனங் களிருப்பனபோல் இவனுடையவும் இருக்கின்றன. என்பர்.

இவன் சிவபக்தன். இவனால், ஆலயங்களுக் கேற்பட்ட நன்மைகள் பல. இவன் காலநிலைகளெல்லாம், மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தனவே.

---

## திருவாலீசுவரம் கோவில், சிலாசாஸனம்.

### ஜடாவர்மன் குலசேகரன்,

### மெய்க்கீர்த்தி.

---

பூதல வனிதை மேதக விளங்க
மந்தா மார்பி லிந்திரை களிப்பப்
புயவரைதழுவி ஜெயமக ளிருப்ப
மயலறு சிறப்பின் மாமுனி தேர்ந்த
இயலிசை நாடக மெழில்பெற வளர
வஞ்சினங்கூறி மதகளி றடர்த்து
வெஞ்சின வேங்கை வில்லுட னொளிப்பத்
திக்கடிப்படுத்துச் சக்கரஞ்செல்ல
பவ்வ மானிலம் பார்த்திபர் பொதுவறத்
தெய்வமேருவிற் சேல்விளை யாட
ஒரு ... ... நெஞ்சத் திருவகைப் பிறப்பின்
முந்நூல் மார்பின் நான்மறை யாளர்
மாக விசும்பின் வானவர்க் கமைந்த
யாக வேள்வி யிடந்தொறு மியல
ஐம்புல னடக்கு மருமைசால் அறுவகைச்
செம்பொருட் சமயம் சீருடன் அகவ
எழுபொழில் கவித்த முழுமதிக் கவிகைத்
திருநிலவு சொரிந்து இருநில வரப்பில்

வெங்கலி கடிந்து செங்கோ னடப்ப
விண்பொரு சிகர மாதிர வெண்கோட்
டெண்பெருங் களிறு இசைமக ளோங்க
வொன்பது கண்டத் துயர்குல வேந்தரும்
அன்புடன் வணங்கி யருந்திறை காட்டி
யணிசுடர் முடிமேல் அடிமலர் சூடி
வளங்கெழு கவரி சேரர் செம்பியர்
இரண்டொருங் கசைப்ப வீரசிங் காதனத்து
மேரு நாப்பண் கடவுண் மீனமர்
கற்புத் திகழ உடன்முடி சூடி
உலகம் போற்றச் செருமலி தானைப்
பார்புலவேந்தர் ஆடகத் தோளும்
ஆரமும் பிரியா ஓடரி நெடுங்கண்
ஒண்டொடி மகளிர் திலக முகமேற்
சேவடி வைக்கும் உலகமுழுதுடை
யாரொடும் வீற்றிருந்தருளிய, ஸ்ரீ கோச்சடைய பன்மரான
திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலசேகரதேவர்க்கு யாண்டு
மூன்ருவது. ... ... ... ...

---

41-வது

மாறவர்மன் சுந்தரபாண்டியன். 2—வது

இவன், கி. பி. 1238ல் பட்டத்திற்கு வந்து 1251-வரை அரசாண்டிருக்கின்ருன். இவனுடைய மெய்க்கீர்த்தி முற்கூறிய 2-வது ஜடாவர்மன் குலசேகரன், மெய்க்கீர்த்தியைப் பொருளாற் பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. மெய்க்கீர்த்தியிற்கண்டபடி இவன் செய்கைகளெல்லா மிருக்குமோவென்பது சந்தேகந்தான். பலநாடுகளையும், இவன் வென்றதாக

மாத்திரம் இவன் மெய்க்கீர்த்தி பொதுவாய்க் கூறுகின்றதே யன்றி, இன்னின்ன காலத்தில், இன்னின்ன காரணத்தால், இன்னின்ன அரசரை வென்றானென, அது யாதுங் கூறிற் றில்லை. என்றாலும், இவன், கொல்லத்தை வென்றதற் கறி குறியாகத் திருநெல்வேலி மேலஇரதவீதிக்கு மேலபால் ஓர் சோலையைவைத்து வளர்த்துஅதற்குக், "கொல்லங்கொண்ட சோலை" எனப் பெயரிட்டு ஆங்கோர் மண்டபத்தில் முன் னமே பிரதிஷ்டிக்கப்பட்டிருந்த நின்றசீர்நெடுமாற நாய னார்க்கும் திருவிழாக்காலங்களில் ஆங்குஎழுந்தருளும் சுவாமி நெல்லையப்பருக்கும் விசேஷ பூஜைகள் நடக்கும்படி பல விளைநிலங்களை வரியில்லாமல் விட்டுக்கொடுத்திருக்கின்றான். ஈழத்தை இவன் வென்றிருக்கின்றானென்று மொரு சாசனம் கூறுகின்றது. 'ஈழங்கொண்ட சோலை' என்றுஓர் ஆராமமும் இவனால் வைத்து வளர்க்கப்பட்டதாகத் தெரிகின்றது. இவ னைப்பற்றிய வேறு சில சாசனங்கள், "ஈழங்கொண்ட சதுர் வேதி மங்கல"மெனப் பாண்டிய நாட்டின் ஓர்பாகத்தைக் குறிக்கின்றன.

சைவ சமயாசாரியர்களாகிய அப்பாதியர் லோகோப காரமாய்த்திருவாய் மலர்ந்தருளிய தேவாரதிருவாசகங்களைச் சிவாலயங்களில், ஆராதனை வேளைகளில் திருஞானம்[தேவா ரம்] ஓதவேண்டுமென, தெய்வக்கன்மிகளும், மச்சனார் விக்கிரமசோழதேவரும்இப்பாண்டியனைக்கேட்டுக்கொள்ள, அதற்கிசைந்த இவனும், அவ்விக்கிரம சோழதேவரையே அத்திருஞானம் ஓதத்தக்க யோக்கியதை உள்ளவர்களைத் தெரிந்தெடுக்குமாறு கேட்டுக்கொண்டபடி, அவரால் சில

மடாதிபதிகளான தபசிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அத்தபசிகளே காலமுறைதவருது, சுவாமி நெல்லையப்பர் சந்நிதியில் தேவாரப் பணிவிடைகள் நடத்திவந்திருக்கின்றனர். இத்தபசிகள் வசிப்பதற்கு மடங்களும், போஜனங்களுக்கு விளைநிலங்களும் இப்பாண்டியனே நல்கிஇருக்கின்றனன். இதனை விளக்கும் சிலாசாசனங்கள் மிகவும் அருமை வாய்ந்தனவாயிருத்தலின் மெய்க்கீர்த்தியும், மானிபநில விபரங்களும் நீங்கலாகத் திருஞானமோதும் தபசிகளை மாத்திரம் விளக்கும் சாசனபாகத்தை இங்கு வரைதலானேன்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ...........கோமாறபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டியதேவர்க்கு யாண்டு 2-வது 176நாள் மதுரோதய வளநாட்டு மாடக்குளக்கீழ் மதுரைக் கோவில் பள்ளிபறைக்கூடத்து ........... எழுந்தருளியிருந்து கீழவேம்புநாட்டுத் திருநெல்வேலி உடையார் கோவில் பதிபாதமுதல் பட்டடை பஞ்சாசாரியார் தெய்வக்கன்மிகளுக்குச் செய்ய திருவாய்மொழிந்தருளினபடி இவ்வுடையார் திருமுன்பு திருஞானமோத மச்சனூர் விக்கிரம சோழனூர் கண்ட தபசிகளில், விஷகண்டதேவர், சந்தானத்து எல்லையில்லாத தேவர்சிஷ்யரில் தவப் பெருமானுக்கும், பகவத் ஸந்தானத்து மகாதேவ சிஷ்யரில் அநபாயருக்கும், திருவாரூர் வடக்கில் மடத்தில் சிவபாத இருதயர் சிஷ்யரில் திருநட்டப்பெருமானுக்கும், பிக்ஷாமட சந்தானத்து இராவளர் பசுபதிதேவ சிஷ்யரில் நின்றியங்கி ஆடுவாருக்கும், திருவாரூர் வடக்கில் மடத்து அஸ்திரதேவ சிஷ்யரில் சந்தர்ன தேவருக்கும், பிக்ஷாமட சந்தானத்து திருநாகீசுவரத்து இராவளர் சிஷ்யரில் திருஞான சம்பந்தருக்கும், இச்சந்தானத்து இராவளர் பசுபதிதேவர் சிஷ்யரில் கலிகடிந்த

கையனுக்கும், மதுரை தெற்கில் மடசந்தானத்து நீலகண்ட சிவர் சிஷ்யரில் திருநெல்வேலி உடையார்க்கும், திருநெல் வேலி மாளிகை மடத்து அழகியநாயகர் சந்தானத்து உய்யக் கொண்டதேவர் சிஷ்யரில் திருநெல்வேலி உடையார்க்கும், பிக்ஷாமட சந்தானத்து இராவளர் பசுபதிதேவ சிஷ்யரில் சிவமுத்திகாட்டினருக்கும், திருநெல்வேலி தெற்கில்மடத்து கீழமட சந்தானத்து அனுக்கவன்றொண்டர் சிஷ்யரில் அற முரைத்த பெருமாளுக்கும், இவர்கள் வர்க்கத்தில் திருஞானம் ஓதும்பேர்க்கும் போஜனம் உள்ளிட்டு வேண்டுவனவுக்கும் முள்ளிநாட்டு சேரவன்மகாதேவி....................................."

இத்திருஞானம் ஓதும் கைங்கரியம், இச்சுந்தரபாண்டிய னுக்கு முன்னிருந்த சிலபாண்டியர்களாலும், சோழபல்லவ வேந்தர்களாலும் ஏகதேசங்களிற் கைக்கொள்ளப்பட்டிருந் ததாகத் தெரிகின்றது. இப் பாண்டியனைப்போ லவர்கள் வெகுபக்தி சிரத்தையாகத் திருஞான மோதுதற்குத் தகுதி யான அதிகாரிகளை ஸ்திரமாய் நியமித்திருந்ததாகத் தெரிய வில்லை. இப்பணிவிடை, இப்பாண்டியனாலேயே இத்தென் தமிழ் நாடு முழுவதிலுமுள்ள சிவாலயங்களில் நடைபெறுவ தாயிற்றென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. இதுவே, இவன் காலத்தில் அதியற்புத விசேஷமாக விளங்குகின்றது.

இப்பாண்டியன் தலைநகர் மதுரையோடு திருநெல்வேலி யுமாம். மற்றுமுள்ள காலநிலைமைகளெல்லாம் இவனுக்கு முன்னரசாண்ட இரண்டாவது ஜடாவர்மன் குலசேகரன் காலத்தனவே. இவனுக்குக் கோனேர்மைகொண்டா னென்ற சுருக்கப்பெயரு முண்டென்று தெரிகிறது.

"திருஞானமோதல்" என்பதற்கு "சிவஞானசித்தியார், சிவஞானபோதம், திருஞானஉலா, தேவாரதிருவாசகங்கள்

ஓதல்" எனப் பலரும் பலவிதமாய்ப் பொருள் கூறுநிற்கின்றனர். தேவாரமோதுதலென்று கூறுதலே சிறப்புடைத்து என்று தோன்றுகின்றது.

---

## மாறவர்மன் சுந்தரபாண்டியன் 2—வது மெய்க்கீர்த்தி,

---

பூமலர்த் திருவும் பொருஜய மடந்தையும்
தாமரைக் குவிமுலை சேரப்புயத்திருப்ப
வேத நாவளர் வெள்ளிதழ்த் தாமரைக்
காதன் மாது கவின்பெறத் திளைப்ப
வெண்டிரை யுடுத்த மண்டிணிக் கிடக்கைத்
திருநில மடந்தை யுரிமையிற் களிப்பச்
சமயமும் நீதியும் தருமமும் தழைப்ப-
இமையவர் விழாக்கொடி இடந்தொறு மெடுப்பக்
கருங்கலிக் கனல்கெடக் கடவுள் வேதியர்
அருந்தொழில் வேள்விச் செங்கனல் வளர்ப்பச்
சுருதியுந் தமிழும் தொல்வளங் குலவப்
பொருதிறலாழி பூதலஞ் சூழ்வர
ஒருகை இருசெவி மும்மத நாற்கோட்
டயிரா வதமுதற் செயிதீர் கொற்றத்
தெண்டிசை யானை யெருத்த மேறிக்
க............................ கயல்களி கூரக்
கோசலந துளுவங் குகிரங்குச்சரம்
போசல மாகதம் பொப்பளம் புண்டரம்
கலிங்கம் ஈழம், கடாரங் கவுடம்
தெலிங்கஞ் சோனகம் சீன முதலா

விதிமுறை திகழ வெவ்வேறு வகுத்த
முழுநிலக் கிழமையின் முடிபுனை வேந்தர்க்
கொருதனி நாயக னென்றுல கேத்தத்
திருமுடி சூடிச் செங்கோலோச்சிக்
கொற்றத் தாளக் குளிர்குடை நீழற்
கற்றைக் கவரி காவலர் வீச
மிடைகதிர் நவமணி வீரசிம்மாசனத்
துடன் முடிசூடி யுயர்குலத் திருவெனப்
பங்கய மலர்க்கரம் குவித்துப் பார்த்திபர்
மங்கயர்திரண்டு வணங்குஞ் சென்னிச்
சுடரொளி மௌலிச் சூடாமணிமிசைச்
சிவந்த விணைமலர்ச் சீரடி மதுகரம்
கமலமென்றணுகு முலகமுழுதுடையாளொடு
வீற்றிருந்தருளிய

மாமுதல் மதிக்குலம் விளக்கிய கோமுதற் கோமாறவர்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவர்க்கு யாண்டு, 2—வது................ [திருநெல்வேலி சாஸனம்]

---

### 42—வது

### 1—வது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்

### அல்லது,

### எம்மண்டலமுங்கொண்ட, சுந்தரபாண்டியன்.

இவ்வேந்தனைப், "பாண்டியன்குலத்துக்கோர் வெற்றிப் பதாகை" யெனக் கூறுவதே தகுதி. இவனுடைய, விஜயங்களைக் கேட்டால் இவனையோர் அவதார புருஷனென்றே

எவர்க்குஞ் சொல்லத்தோன்றும். இவன், மாறன் சுந்தரபாண்டியனுக்குப் பிறகு கி. பி. 1251ல் பட்டம்பெற்று 20-வருடங்களுக்கு மேலேயே இராஜ்யாதிகாரஞ் செலுத்தினவனாகத் தெரிகின்றான். இவ்வாண்டுகளுக்குள் இவன், பெற்றுக்கொண்ட வென்றியும் புகழும் புண்ணியமும் பலவாகும்.

இவன் சிங்காதன மேறினதும் உலகத்திலுள்ள பல பாகங்களையும் பொதுநீக்கித் தானொருவனே யாளவேண்டுமென்ற எண்ணங்கொண்டு போர்க்குரிய கருவிகளையும், காலாள் முதலான படைகளையும் பெருக்கிக்கொண்டான். பலசேனைத் தலைவர்களையும் நியமித்துக்கொண்டான். அத்தலைவர்கள் யாவர்க்கும் தலைவனாக அதியற்புத பராக்கிரமசாலியும், கப்பலூர் வாசியும், கப்பற் கோவைநாயகனும், தமிழபிமானியுமான தொண்டைமான்கருமாணிக்கன் என்பனை ஏற்படுத்தினான். இப்படியெல்லாம் பலங்களைச் சித்தஞ்செய்துகொண்டு, திக்குவிஜயஞ்செய்யப் புறப்பட்டான். தென்றிசையில் தனக்குச் சத்துருக்க ளில்லாததினால் மேற்றிசையிலுள்ள கோளத்துட்புகுந்து போர்செய்யவந்த அந்நாட்டரசனை அடியற முடித்து, அப்பால், கர்னடக வேந்தனாகிய ஹொசல வீரசோமேஸ்வரன் தன்னிடத்திற்சினங்கொண்டு பொரவர, அவனை, அஞ்சிப்புறங்காட்டி ஓட அடர்த்து அளவிறந்த யானைகளையும், திரவியக் குவியல்களையும், கப்பமாகப் பெற்று அவனுக்குட்பட்டிருந்த நாடுகளோடு ஸ்ரீ ரெங்கத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டான். அப்பால் யானையை ஒத்த பராக்கிரமத்தையுடைய ஓரிசாவிலுள்ள கதக (Cuttack) அரசனாகிய கஜபதியைச் சிங்கம்போற் கர்ச்சித்து அமராட அழைப்ப, அவன் அங்கம்நடுநடுங்க, ஆவிசுருங்க, அடைக்கலம் புகுந்தான். அப்பால்; சண்டைக்கெழுந்த கர்கதிய அரசன் கணா

பதி என்பானை, இரணகளத்தில் ஓர் பெருஞ்சிங்கத்தின் முன் சிறுமான்படுமாறு படுவித்து அடக்கி அடைக்கலம் புகுந்த கஜபதியோடு இவனையும் தனக்கு அடிமையாக்கிக்கொண்டு அவர்க்குரிய சகல ஐசுவரியங்களையும், வளஞ்செறிந்த தெலுங்கு தேசங்களையும் தன் வசப்படுத்திக்கொண்டான். காஞ்சீபுரமும் இவனுக்குட்பட்டுவிட்டது. பிறகு, வீரகாந்த கோபாலனென்னும் வேந்தனது நாடுநகரங்களாய காடுகளைக் கடையுகக் கனல்போல் பொங்கி எரித்துக் கரியாக்கினன்.

பிறகு, இப்பாண்டியன், வடநாட்டுவேந்தர் பலரையும் வெற்றிகொண்டுசோழ, பல்லவர்களையும் வெல்வான், தெற்கு நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தான். இவன் செய்தி இவ்வாறாக, சோழநாட்டில் அக்காலம் அரசுசெலுத்திக் கொண்டிருந்த சோழன் மூன்றாவது இராஜராஜனுக்கும் பல்லவர் கோனாகிய கோப்பெருஞ் சிங்கனுக்கும் சிலகாலமாய் நடந்துகொண்டிருந்த சண்டையில் சோழன் தோற்றான். தோற்கவே அவனைப் பல்லவ வேந்தன் தளைசெய்து கொண்டுபோய்ச் சேந்தமங்கலமென்னுமூரிலுள்ள சிறைக் கோட்டத்தி லடைத்து வருத்தினன். இதுதெரிந்த அந்த இராஜஇராஜனுக்கு மாமனும், காவிரிவளங்கொழிக்கும் நாட்டின்ஓர்பகுதிக்குக்காவலனும்,நிரம்பியபடைப்பெருக்கமுடையவனுமான ஹோசல நரசிம்மன் 2-வது என்பவன், தன்னுடைய மருமகனைச் சிறைமீட்கக்கருதித் திரண்ட சேனையுடன் விரைந்துவந்து கோப்பெருஞ்சிங்கனைத் தாக்கவாரம்பித்தான். பெருஞ்சிங்கன், ஹோசலனின் படைப் பெருக்கத்தையும் வீரதீரங்களையுங்கண்டு மனந்தளர்ந்து, செய்வதொன்றுந் தோன்றாது திகைத்துக்கொண்டிருந்தான். இச்சமயத்தில்

சுந்தரபாண்டியான் படைக்கடல்கள் புடைசூழச் சேந்தமங் கலத்தை யடுத்தான். அடுக்கவே, பெருஞ்சிங்கன் அப்பாண் டியனுடைய ஆற்றலையும், அளவிறந்த சேனைசமூகங்களையும் கண்டு பதைபதைத்து ஒருவாறுமனம்தெளிந்து அவனை எதிர் கொண்டழைத்து வணங்கியுபசரித்துத் தற்காலம் தனக்கு வந்திருக்கும் ஹோசலனுடைய விரோதமாகிய ஆபத்தினின் றும் தன்னைக் காப்பாற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண் டான். அதற்குப் பாண்டியனும் சம்மதித்துத் தன்னுடைய போர்வீரரை ஹோசலன் சேனைமேற் பாய்ந்துடற்றுமாறு தூண்டினன். இருபடைகளும் கைகலந்தன. இப்போர் சில காலம் நடந்திருக்கவேண்டும். இருதிறத்தார் சேனைகளிலும் எண்ணிறந்த உயிர்ச்சேதங்களேற்பட்டன. இப்படி வெகு கொடூரமாய் நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தைக் கண்டு கோப்பெருஞ்சிங்கன் உள்ளமும் உடலும் கிடுகிடென்று நடுங்கி ஒன்றும் பேசவாயெழாதவனாய் ஒருபாலொதுங்கி நின்றுவிட்டான். பாண்டியவீரர்கள் உயிரைத் துரும் பாக மதித்து ஒப்வொழிவில்லாம லமராடவே, ஹோசலன் சேனைகள் வரவரக் குறைந்தொழிவதாயின. சிலபொழுது செல்ல, ஹோசலனும் ஓடிஒளித்தான். ஒளியவே பாண்டி யன் எஞ்சிநின்ற அவனுடைய கரிபரி முதலானவைகளையும், இராஜ்யத்தையும் கைப்பற்றி அவைகளைத் தன்னைச் சரண டைந்த கோப்பெருஞ்சிங்கனுக்குக் கொடுத்து அவனைத் தனக்குட்பட்டிருக்குமோர் போரசனாக்கினன். இவ்வாறு தன்னை மேம்படுத்திய சுந்தரபாண்டியனுக்குக் கோப்பெருஞ் சிங்கன் ஓர் அடிமையாளனைப்போல் நடந்துழைப்பதாயி னன். பாண்டியனும் அவனது நன்றியறிவை நோக்கி அவ னிடத்தில் மேன்மேலும் அன்புகாட்டிவந்தான்.

அப்பால் சுந்தரபாண்டியன் வடநாட்டிற் பெரும்பாகத்தையும் வெற்றிகொண்டு, வெற்றிப்பிரதாபக் கட்டியமுழங்கத் தலைநகராகிய மதுரையில் வந்து சிலநாளிருந்தான். இருக்கையில், முன் தனக்கும் ஹோசலனுக்கும் நடந்த சண்டையில் இலங்கை வேந்தன் ஹோசலனுக்கு ஏதோ சிலஉதவிகள் செய்தான்போலும். அதனால், இவன் அவனையடக்கக் கருதி ஒருநாள் பெரும் படைகளுடன் கீழக்கடற்கரையை யடுத்தான். இவன் இவ்வாறு வருதலைக் கேள்விப்பட்ட இலங்கையர்கோன் மனமிடிந்து பல்லாயிரக்கணக்கான பொற்காசுகளையும், இரத்தினாபரணங்களையும் கப்பமாக ஆட்கள் வசம் கொடுத்தனுப்பினதுமல்லாமல், தான் கீழ்ப்பட்டுவிட்டதாகவும் சொல்லியனுப்பினான். பாண்டியனோ, அவைகளொன்றையு மேற்றுக்கொள்ளாமற் காகுத்தனைப்போல் தெண்ணீர்க்கடல்மேல் சேனைக்கடல்கள் பரவ நடத்தி, இலங்கை சென்று தலைநகரைத் தாக்கிக் கோட்டைகளையெல்லாம் படுசூரணஞ்செய்து சிங்கள வேந்தனைக் கட்டிக்கொணரச் செய்தான். அவனுக்குள்ள நிதிகளையெல்லாங் கைக்கொண்டான். தனக்கு அடங்கி நடந்துவரக் கட்டளையிட்டான். சிலபொழுதில் மதுரையைநோக்கித் திரும்பினான். இங்ஙனமிவன் இராமபிரானைப்போல் இலங்கையை வென்று மீண்டதால் "கோதண்ட ராமன்" என உலகத்தோரா லழைக்கப்பெற்றனன். இப்படித் தானழைக்கப்பட்டதற் கறிகுறியாக சில தேவாலயங்களில் "கோதண்டராமன்சந்தி" எனக்கட்டளை வழிபாடுகள் நீடூழி நடந்துவரும்படி ஏற்பாடு செய்திருக்கின்றான். இவ்விஷயம் சிலாசாசனங்களாற் தெரிகின்றது. அன்றியுமிவன் வடநாட்டிற் பெரும்பாகத்தோடு, தெற்கே குமரி, மேற்கும், கிழக்கும் கடல்கள் ஆகிய இந்தஎல்லைக்குட்பட்ட நாடுகளையெல்லாம் தனக்கே உரிமையாக்கிக்கொண்டதால்

"எம்மண்டலமுங்கொண்ட சுந்தரபாண்டியன்" என்னும் சிறப்புப் பெயரும் பெற்றிருக்கின்றான். இவனுடைய சாசனங்கள் பலவும் இவனை எம்மண்டலமுங்கொண்டருளிய சுந்தரபாண்டியனென்றே கூறுகின்றன. இராஜதானியாகிய மதுராபுரியைச் செல்வப் பெருக்கால் தேவலோகம்போல் விளங்கச்செய்து அதற்கு யாதொருவிதமான தீங்குமணுகாதபடி பரிபாலித்துவந்ததால் இவனை "மதுரை மகாதேவ" னெனவும் ஆன்றோரழைப்பாராயினர்.

திக்கு விஜயத்தில் தனக்குக்கிடைத்த கோடிக்கணக்கான நிதிகளில் சிலபாகம் சேனைகளின் பொருட்டுச் செலவிட்டதுபோக மற்றையப் பெரும்பகுதியால் ஸ்ரீரெங்கநாதர் கோவிலில் விசித்திர வேலைப்பாடுகளமைந்த துலாபுருஷமண்டபங்களும் கூடகோபுராதிகளும், வேறு சில மண்டபங்களும், திருப்பணி செய்திருக்கின்றான். ஸ்ரீ அரங்கநாதரை அலங்கரிக்கும்பொருட்டு விலை மதிக்கமுடியாத ஒன்பது இரத்தினங்களை நல்கினான். அரங்க விமானத்தைத் தங்கத் தகட்டாற் பொதியவேண்டிப்பதினெட்டு லெக்ஷம் தங்கத் துண்டுகளைக்கொடுத்தான். மற்றும் அக்கோயிலுக்கு வேண்டும் திருப்பணிமுதலானவைகளுக்கும் செம்பொற்றுண்டுகளைக்கொணர்ந்து சொரிந்தான். இவ்வாறு செய்ததாலிவனைப்பெரியோர் "கோவில் பொன்வேய்ந்தபெருமாள்" எனவும் அபிதானஞ்சூட்டி அழைக்கலாயினர். சந்திர குலத்தரசர்களில் சகல விதத்திலுமிவன் மிகப்பிரசித்திபெற்று விளங்கினதால் "சந்திரகுலாபரணன்" என்ற நாமதேயமும் இவனுக்கு வழங்கலாயது. வடநாட்டிலிருந்து ஜெயசீலனாய்த் தென்னாட்டுக்கு வரும்பொழுது ஸ்ரீசிதம்பர க்ஷேத்திரத்திற்

புகுந்து ஆங்குக்கனகசபையில் நர்த்தனஞ்செய்துகொண்டி ருக்கும் ஸ்ரீநடராஜப்பெருமானின் திருவடிகளில் சாஷ்டாங் கமாக நமஸ்கரித்து ஆங்குச்சிலதர்மங்களுஞ் செய்திருக்கின் ருன். இவையன்றி இவனுற் கொடுக்கப்பட்ட தானங்க ளும், சம்மானங்களும், அளவுகடந்தன என்பர். இவனைப் பற்றிய சிலாசாசனங்கள் வடக்கே நெல்லூர்முதல் கன்னித் துறைவரையும், மெய்க்கீர்த்திப்பாடல்கள் உள்ளனவும், இல் லாதனவுமாய் ஆங்காங்குத்தென்படுகின்றன.ஆதலின் இவன் பலக்ஷேத்திரங்களையும் நேர்மையுறப்பரிபாலித்து வந்திருக்க வேண்டுமென்று தெரிகின்ருன். சைவம், வைஷ்ணவம் முத லானஅகச்சமயங்களைப்பாரபக்ஷமின்றித் தழுவியனுஷ்டித்து வந்தவனுகவும் தெரிகின்ருன். புகழையும் புண்ணியத்தை யுமன்றிப்பொருளையொருபொருட்டாக இவன் மதித்ததில்லை. இவன்காலத்து நாணயங்கள் இப்பவும் காணப்படுகின்றன வென்றும், அவைகளில், "கோதண்டராமன்" என்ற இவ்வ ரசன் பெயரும், மீனக்கொடியும் முறையே முன் பின்புறங்க ளில் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன எனவும் கூறுகின்றனர். கி. பி. 1251-முதல் 1271-வரை இவன், அரசு வீற்றிருந்தன னென்பர்.

---

43-வது

## ஜடாவர்மன் வீரபாண்டியன்.

---

இப்பாண்டியன், கூறிப்போந்த எம்மண்டலமும்கொண் டருளிய முதலாவது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத் திலேயே அவனையடுத்துப்பட்டம் பெற்றிருந்தாகத்தெரிவ

தால் இவனே அவனுக்குச்சகோதரனயிருந்தாலுமிருக்கலாம், அல்லது பெரியப்பன், சிற்றப்பன், மகனயிருந்தாலுமிருக்கலாம் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. சுந்தரபாண்டியன் கி. பி. 1251ல் பட்டம்பெற்றான். இவன் 1254ல் மகுடம் சூடியிருக்கின்றான். மேலும் இவன் சுந்தரபாண்டியன் கொண்ட வெற்றிப்பிரதாபங்கள், தனக்குமுள்ளதாகப் பாத்தியதை கொண்டாடுகின்றான். இவ்வாறெல்லாமிருத்தலால் இவன், சடையன் சுந்தரபாண்டியனுடன் சேர்ந்தேபோர்பலவென்றவனாகத்தெரிகின்றான். இவனைப்பற்றிய சாசனமொன்று.

"* ஸ்வஸ்தி ஸ்ரீகோச்சடையபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஈழமும், கொங்கும், சேரமண்டலமுங்கொண்டு வெல்லாரைவென்று பெரும்பற்றப் புலியூரில் வீராபிஷேகமும், விஜயாபிஷேகமும் பண்ணியருளிய ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்குயாண்டு......" எனக்கூறியிருத்தலைக்கொண்டு "சுந்தரபாண்டியன் எவ, இவ்வீரபாண்டியன் ஈழமும், கொங்கும் சேரமண்டலங்களையும் வென்றிருக்கலாம். அவ்வென்றிப்பிரதாபங்களைச் சுந்தரபாண்டியன் தனக்குச்சூட்டிக்கொண்டிருக்கலாம்" என்று கூறுவதும் பொருந்துவதேயாகும். எது எவ்வாருயினும் இவன் கொண்ட வெற்றிகளைப்பற்றிச் சந்தேகிக்க இடமேயில்லை. "வெல்லாரைவென்று" என்று சாசனம்பொதுவாய்க்கூறுவதால் இவன் எல்லாச்சண்டையிலும் சுந்தரபாண்டியனுக்குத்துணை புரிந்திருக்கவேண்டுமென்பது வெளிப்படை. "வடநாட்டு வேந்தரைவென்று வருங்காலத்திலே சிதம்பரத்தில் ஸ்ரீநடராஜப்பெருமானை வணங்கினன். சுந்தரபாண்டியன்" என்று அவன் சரித்திரத்தில் கூறியிருப்

*இச்சிலாசாஸனம் இலஞ்சி குமரக்கடவுள் கோயிலிற்கண்டது.

படுதால் அக்காலத்தில் அவ்விடத்திலேயே இவ்வீரபாண்டியன் வெற்றிபெற்ற வீரருக்கு வீராபிஷேகமும், தனக்கு விஜயாபிஷேகமும், செய்துகொண்டிருக்கவேண்டுமென்று துணியப்படுகிறது.

சடையன் சுந்தரபாண்டியன்பட்டம் பெற்று மூன்று வருடத்துக்குப்பின் இவ்வீரபாண்டியன் கிரீடாதிபதியாயினன் என்று தெரிவதால், சுந்தரபாண்டியன்தான் மகுடம் தரித்த மூன்று வருஷங்களுக்குள்ளேயே, இவ்வீரபாண்டியனைத்துணைகொண்டு பலநாடுகளையும் வென்றிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. தனக்குப் படைத்துணையாய் நின்ற வீரபாண்டியனுக்குச் சுந்தரபாண்டியன், மதுரைக்குத் தென்பாலுள்ள நாடுகளையெல்லாம் ஆண்டுவரும்படி முடி சூட்டியிருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். தென்னடே இவனுக்குட்பட்டிருந்ததென்றேன். இவன் சாசனங்கள் இந்நாடுகளில் விசேஷமாய்க் காணப்படுவதினால். பிற நாடுகளில் இவனுடைய சாசனங்களில்லையென்றேசொல்லலாம். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் சில உள வென்பர். இவன் தென் தமிழ்நாட்டிற்கு இறைவனாயினும் இவனுடையஆணை சுந்தரபாண்டியனால் ஆளப்பட்டுவந்த தேசங்களிலெல்லாம் மதிக்கப்பெற்றிருந்தது.

இந்த வீரபாண்டியன் மகுடம்தரித்த நாள்முதல் தென்னாட்டிலுள்ள பலதேவாலயங்களிலும் இவனுத்திரவால் பல பிரபுக்கள் எத்தனையோ கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். இவனும் ஆலயங்களை நன்கு கவனித்திருக்கின்றான். இவன் சாசனங்கள் இவன் பட்டம்பெற்று மூன்றாவது

ஆண்டுமுதல் பல கோயில்களிலும் சிலைகளிற் காணப்படுகின்றன. அவைகளுள் முக்கியமான கோயில்கள் திருவாலீசுரம். திருநெல்வேலி, இலஞ்சி முதலானவைகளே. இவன் காலத்தில் சிவாலயங்களில் திருஞானம் ஓதுதலென்னும் பணிவிடை சிறப்புற்றிருந்தாகத் தெரிகிறது. பல மடங்களும் இவனால் ஆதரிக்கப்பட்டதாகவும் இவன் சாசனங்கள் அறிவிக்கின்றன. சில கோயில்களில் வீரபாண்டியன் சந்தி பூஜைநடந்துவந்திருக்கிறதாகத்தெரிகிறது. இவன் கி.பி. 1271 வரை அரசியற்றி வந்திருக்கின்றான்.

கோமாறன் வீரபாண்டியனென்னும் ஓரரசனும் இவன் காலத்திலிருந்தவனாகத்தெரிகின்றான். கி. பி. 1253.

---

## 44—வது

## மாறன் ஸ்ரீ வல்லபபாண்டியன்.

---

இத்தென்னவர்கோன், கி.பி. 1257-ல் ராஜரீகம்செலுத்தினவனாகத் தெரிகின்றான். முதலாவது சுந்தரபாண்டியனுக்குச் சடையன் வீரபாண்டியன் எவ்வித முறையோ, அவ்வித முறையே இவ்வீரபாண்டியனுக்கு மிப்பாண்டியனுக்குமிருக்கலாமென்று தெரிகின்றது. இந்த ஸ்ரீ வல்லபன், சடையன் வீரபாண்டியனுக்குப் பிறகு மூன்று வருஷங்கழித்துப் பட்டத்துக்கு வந்திருக்கிறான். இவனுடைய அரசாட்சி வேறு சில பாண்டியரின் ஆட்சியுடன் கலந்தே நிகழ்ந்திருக்கவேண்டுமென்று தெளியப்படுகிறது. இவனுடைய சாச

னங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் சில கோயில்களிற் சிலை யிற் காணப்படுகின்றன. அவைகளில் ஒன்றிலுள்ள மெய்க்கீர்த்தி, கீழ்வரையப்பட்டிருப்பது:

"......பூமகள் தேமகள் பொற்புயத்திருப்ப, நாமகள் மருவநான்மறை நெறியின், இருநில முழுதும் ஒரு குடை நிழற்ற, கடுங்கலிகடிந்து செங்கோலோச்சி, எத்தருங்கீர்த்தி இமசேதுபரியந்தம்,கோத்தொழில் நடாத்திப்பார்த்திபரிறைஞ்ச, வென்றி முரசுமுன்றில் முழங்கப்,பொருஞ்சிலைமுறியப் புலிபிலஞ்சேரக்,கனகமால்வரையில்கயல்விளையாட, விஜயாபிஷேகம் முறைமையிற்பண்ணி, இலங்கிய கதிர்மணிவீரசிம்மாசனத்து, வீற்றிருந்தருளிய ஸ்ரீ கோமாறபன்மரானதிரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ வல்லபதேவர்க்கு யாண்டு பதினோராவது........."

இதிற் கூறியபடி இவன் சேரசோழர்களை வென்றிருந்தாலுமிருக்கலாம். ஹிமசேது பரியந்தம் கோத்தொழில் நடாத்தியதாகவும், இமயத்தில் கயல்பொறித்ததாகவும் கூறியிருப்பன எவ்வளவிற் பொருந்துமோ அறியேன். இந்த ஸ்ரீ வல்லபபாண்டியன், சுந்தரபாண்டியன் வீரபாண்டியனுகிய இவர்களுக்குட்பட்டிருந்தவனுகத்தான் நினைக்கப்படுகின்றனன். இப் பாண்டியன் காலத்தில் கணவனை இழந்த பதிவிரதைகள் அக்கினிப்பிரவேசஞ்செய்வது வழக்கமெனத் தெரிகிறது. இவனைப்பற்றிய சாசனமொன்று கூறுவதாவது:

"...........முரப்பநாட்டு ராஜராயநல்லூர் அம்பலக்கூத்தன் அனவரததானனான தென்னவன் முரப்பநாட்டுக் கிழவனேன் இந்நாட்டு சேஞ்ஞலூரான திருவரங்கத்துச்

சதுர்வேதிமங்கலத்துத் திருப்புலீஸ்சுவரமுடையமகாதேவர்க்கு நான் தர்மதானம் பண்ணிக்கொடுத்த நிலமாவது, என் மகள் புரிசாண்டி தீப்பாய்கிறபோது இறையிலி தேவதானமாக நீர்வார்த்துக்கொடுத்த நிலமாவது ....................."
இதில் முரப்பநாட்டுத் தலைவன் மகள், தன் புருஷன் காலஞ் சென்றுவிட்டதனாற்போலும், தான் தீப்பாயுமுன் அவ்வூர்க் கோயிலுக்கு விளைநிலம் தானஞ்செய்திருக்கின்றனள். இவ்விஷயம் கவனிக்கத்தக்கது. ஆகவே, இவ்வேந்தன் காலத்திலும் இக்குரூரமானகிருத்தியம் நின்றபாடில்லையென்றுதெரிகிறது. இச் சிலாசாசனம் திருநெல்வேலியின் கிழக்கில் 15 மைல் தூரத்திலிருக்கிற சேஞ்ஞலூர் ஆகிய தற்காலம் செய்துங்கநல்லூர் என்று சொல்லப்படும் ஊரில் சிவன்கோயிலிலிருக்கின்றது.

இந்தக் கோமாறன் ஸ்ரீ வல்லபனுடைய சிலாசாசனங்கள் திருநெல்வேலி, திருவாலீச்சுவரம், சேய்ஞ்ஞலூர் முதலான விடங்களிலிருக்கின்றன. இவன் சிவபக்தியுள்ளவனென்று தெரிகின்றான். இவனைப்பற்றி வேறு விசேஷமொன்றுந் தெரியமுடியவில்லை.

---

## 45—வது
## மாறவர்மன் குலசேகரபாண்டியன்
## அல்லது
## எம்மண்டலமுங்கொண்ட குலசேகரபாண்டியன்.

இவனும் பாண்டியராஜவம்சத்தில் பிரசித்திபெற்றவனே. தனக்கு முன் அரசாண்ட 1-வது ஜடாவர்மன் சுந்தரபாண்டியனைப்போல் தானும் உலகம்மதிக்க விளங்கநினைத்து

ஸ்ரீ வல்லபனுக்குப்பின் கி. பி. 1268-ல் பட்டம் பெற்று, சில காலத்துள் தனக்குமுன் மகுடம் தரித்திருந்த ஸ்ரீ வல்லபன் காலத்திற் கைப்பற்ற முடியாமற்போன சில ராஜ்யங்களின்மேற் படையெடுக்கக் கருதித் தகுதியான சேனைகளைத் திரட்டி அதற்குத் தலைவனாக அஞ்சா நெஞ்சுபடைத்தவனும், மகா வீரனும், அதி புத்திசாலியுமான ஓர் வடநாட்டு முகம்மதியனை "ஆரிய சக்ரவர்த்தி" யென்று பேர்சூட்டி நியமுகஞ் செய்தலானான். இவ்வாறிவன் சில நாளாகச் சகல படைகளையும் குறைவற நிரப்பிக்கொண்டு வெளிப்படவே, பகையென நினைத்த அரசரெல்லாம் நடுநடுங்கி இவனை எதிர்கொண்டழைத்து வணங்கிக் கப்பங்கட்டலாயினர். இக்கால முதல் இவனுக்கு எம்மண்டலமுங்கொண்ட குலசேகரபாண்டியன் எனப் பட்டப்பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும். இவன் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் ஜெயமாலையே சூடியிருக்கின்றனன். எம்மண்டலமுங்கொண்டருளிய சுந்தரபாண்டியனைப்போல் இப்பாண்டியனும் பாண்டிய இராஜ வம்ச சிரோமணியாய் ஜொலிப்பதானானென்பதிற் சந்தேகமில்லை.

இவனிப்படியிருக்கையில், இலங்கையிலரசுபுரிந்துகொண்டிருந்த முதலாவது புவநேகபாகுவென்பவன், அவனுடைய முன்னோர் பலரும் முதலாவது சுந்தரபாண்டியன் முதற்சில பாண்டியர்காலம்வரைச்செலுத்திவந்த கப்பப்பணத்தைத் தான் தலையெடுத்த நாள்முதல் கொடாதிருத்தலை இப்பாண்டியன்குலசேகரன் கண்டு, அதிகோபங்கொண்டு, சேனாதிபதியாகிய ஆரியசக்ரவர்த்தி என்பானை யழைத்து இலங்கை வேந்தனை வென்றுவரக் கட்டளையிட, அவனும் அப்பொழுதே பல்லாயிரக்கணக்கான படைகளுடன் கடல் கடந்து இலங்கையிலுள்ள சுப்பகிரி நகரத்தையடைந்து,

கம்பீரமானதோற்றத்தையும் காவலையுமுடைய கோட்டையை முற்றுகைசெய்தான். இக்காலத்தில் அந்நாட்டிற் கொடியபஞ்சமொன்று குடிகளைப்பஞ்சைகளாக்கிக் கொண்டிருந்ததாலும்,முன்னமே அங்கேவந்து குடியேறிவசித்துவந்ததமிழரும், தெலுங்கருமாகிய ஜனங்களை அவ்விலங்கயரசர் அநாதரவுசெய்துவந்ததாலும், புவனேகபாகுவுக்குப் படைபலம் குன்றியிருந்ததாலும்,உள்நாட்டுக் கலகங்களாலும் வேறுசில காரணங்களாலும் இச்சிங்களவேந்தன், பாண்டியன்சேனைத் தலைவனோடெதிர்க்காமல் அங்குநின்றும் ஓடிவிட்டவனாகத் தெரிகின்றான். ஆரியசக்ரவர்த்தியோ அக்கோட்டைக்குட் புகுந்து ஆங்கிருந்த ஸ்ரீ புத்தரது பல் சேஷத்தையும், அதற்காகக்கட்டியிருந்த அழகிய கோயிலிலுள்ள விசேஷமான ஆபரணாதிதிரவியங்களையும் எடுத்துக்கொண்டதுமன்றி அங்குள்ள பலநாடுநகரங்களையும் பாழாக்கிவிட்டுப்பாண்டிய நாட்டில் மீண்டு, பாண்டிய இராஜவம்சமென்னும் பங்கேருகத்துக்கோர் பகலவன்போற் பிரகாசியாநின்ற குலசேகர பாண்டியன் கைத்தலத்தில் அந்தவிசேஷமான பல்லையும் ஆபரணாதிகளையும் நல்கினன். அவைகளைக்கண்டதும் பாண்டியன் அகமிகக்களித்தவனாய் அந்தச்சேனைத் தலைவனை நோக்கி "நீ புத்தரது பல்லோடு அந்தப் புவநேகபாகுவின் பல்லையும் சேர்த்தே பிடுங்கிக்கொணர்ந்தனை என" மிகமிகப் புகழ்ந்துபேசி வேண்டும்சம்மானங்களுமவனுவப்ப நல்கித் தன்னிடத்திலேயேஸ்திரமாக அவனைவைத்துக்கொண்டான்.

இவ்வாறாக, விசேஷமான புத்தபகவானது பல் சேஷம் போய்விட்டதைத் தெரிந்த புவநேகபாகு, மனம் வருந்திக் கண்ணீர்விட்டான். கொடுக்கவேண்டிய கப்பத்தின் மூன்று

பங்கு அதிகமாகக்கொடுப்பதாய்த் தக்க ஆள்வசஞ்சொல்லி யனுப்பியும் பாண்டியன் "பிடுங்கின பல்லைமீண்டும் நிலைக்கச் செய்யமுடியா"தெனச்சொல்லிப்போட்டான். ஆண்டுகள் சிலசெல்ல 3-வது * பராக்கிரம பாகுவென்பவன் தலையெடுத்தான். அவன் பாண்டியன் குலசேகரனுடைய வீரதீரங்களையும் சேனைப்பெருக்கத்தையும் நன்றாய்க்கேட்டறிந்து, இழந்த பல் சேஷத்தை யுத்தத்தாற் பெறமுடியாதெனத்தீர்மானித்தவனாய் வேடம் மாறி வஞ்சகத்திற் கைதேர்ந்த சிலருடன் பாண்டியநாட்டின் தலைநகராகிய மதுரையில்வந்து சேர்ந்தான். சிலநாளிலவன் எவ்விதமான தந்திரத்தாலேயோ, இழந்தபல்லை, வாய்விட்டு நீங்கிய ஜீவரத்தினத்தை நாகம் மீண்டும் பெற்றுக்கொண்டதுபோற் கைப்பற்றிக்கொண்டு இலங்கை சேர்ந்தான். இவன்காலத்துக்குப்பிறகு 4-வது பராக்கிரமபாகுவால் அப்பல்லுக்கு ஓர் கோவில்கட்டப்பட்டது. அவ்வாலயம் மிகுந்த வேலைப்பாடுடையதென்பர்.

இப்பாண்டியன் கி. பி. 1268ல் பட்டத்துக்குவந்து 1313-வரை நிர்ப்பயமாய்ச்செங்கோல் செலுத்தியிருக்கிறான். இவன்காலத்தில் சோழராஜவம்சமில்லையென்றே சொல்லலாம். அந்தப்பரம்பரை 1-வது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், கோமாறன்ஸ்ரீ வல்லபன் இவர்கள்காலத்திலேயே அடியற்றுப்போயிருக்கவேண்டுமென்று எண்ணப்படுகிறது. மற்றையநாட்டுக்காவலர்களும் இவனுக்கு அடங்கியே வாழ்வுபடைத்து வந்திருக்கின்றனர். இவ்வாறாகக் குலசேகரன் வாழ்ந்துவருங்காலத்தில் பல தேவாலயங்களுக்கும் வேண்டுவன செய்திருக்கின்றான். இவன் மகுடம்தாங்கி

* 3-வது புவனேகபாகு என்பாருமுளர்.

இரண்டு மூன்று வருஷங்களுக்கப்பால்தொடங்கி வரையப்பட்ட சிலாசாசனங்கள் திருநெல்வேலி முதலான தமிழ் ஜில்லாக்களில் மிகுதியும் காணப்படுகின்றன. இவைகளிற்பல இவன் காலத்திற் சில பிரபுக்கள் தர்மம்செய்த விஷயங்களைக் குறிப்பிடுகின்றன. இவன் ஆட்சிக்காலத்தில் பஞ்சம், கொள்ளைநோய் முதலியன இன்றிக் குடி-ஜெனங்கள் சுகமே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஐந்தும் காத்து அரசுபுரிந்த அரசருள் இவனும் ஒருவனே என்பதற்கு ஐயமின்று. அன்றியுமிவன் நோயாற் படுத்தநாளுமில்லை. விரோதிகளென மேலோங்கி இவன்நாட்டை எட்டிப்பார்த்தவரும் எங்குமில்லை.

இத்தகைய பாண்டியகுலசேகரனுப் விளங்கிய குலசேகரனுக்கு ஏற்பட்ட இறுதிக்காலம் மாத்திரம் எவருங்கேட்டு விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. இவனுக்கு அவ்வாறு நேர்ந்தது பூர்வகர்மவினையேயன்றி வேறில்லை. அதனை இங்குச் சிறிது விளக்குவேன்.

இக்குலசேகரன்காலத்தில் அடுத்த பட்டத்துக்குரியவராய்ஐந்துபாண்டியர்களிருந்தனராகத்தெரிகின்றனர், இவர்கள், இவன் பிள்ளைகளும், சகோதரன் மக்களும், காமஸ்திரி மகனும் ஆவரெனத்தோற்றுகின்றனர். முதலாவதாவான் பெயர் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன். இவன் குலசேகரனின் பட்டத்து மனைவி வயிற்றிற் பிறந்தவனுதலாற்பட்டத்துக்குரியவனுமிவனேயாவான். இவனை இங்கு முதலாவது சுந்தரபாண்டியனுக வைத்துக்கொள்க. இரண்டாமவன் மற்றொரு ஜடாவர்மன் சுந்தரபாண்டியனென்பான். இவன் குலசேகரபாண்டியனின் சகோதரன் மகனுயிருக்கலாம். மூன்

ரூமவன் மாறவர்மன் விக்கிரமபாண்டியன். நாலாமவன் ஜடிலன் ஸ்ரீவல்லபன். இவர்களும் இக்குலசேகரனது தாயதிகளின் சந்ததிகளாயிருத்தல்வேண்டும். மற்றொருவன் வீரபாண்டியனென்பவன். இவன் குலசேகரனின் காமக்கிழத்தியின் புதல்வன். அதிமேதாவி, வஞ்சகமும், சூதும் நெஞ்சம் நிறைந்தவன், மகாவீரன். தந்தையின் உள்ளத்தைக்குறிப்பின் அறிந்தொழுகி அவனைத் தன் வசப்படுத்திக் கொண்டான்.

குலசேகரபாண்டியன் பட்டத்துக்குவந்து சில ஆண்டுகளுக்குள்ளேயே ஜெயிக்கவேண்டிய இடங்களையெல்லாம் ஜெயித்து'எம்மண்டலமுங்கொண்டவன்'எனஓர் சிறப்புப்பேரும் தரித்துத்தனது பட்டத்துமனைவியின் மகனாகிய முதலாவது ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுக்கு கி. பி. 1270ல் மகுடம் சூட்டி மதுரையைத்தலைநகராகக்கொண்டு சோழநாடிறுதியாகக் கன்னித்துறைவரை தனக்குப்பின் அரசாள இளவரசப்பட்டங் கட்டினான். இவனுடைய சாசனங்கள் செங்கற்பட்டு, தஞ்சை, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் இருப்பதே இதற்கு அத்தாட்சியாகும். இரண்டாமவனான சுந்தரனை வடக்கிலும் மேற்கிலுமுள்ள கடப்பை கள்ளிக்கோட்டை முதலான இடங்களை அரசிபற்றச்செய்தான். சுந்தரபாண்டியன் சாசனங்கள் அவ்விடங்களில் விசேஷமாய்க் காணப்படுகின்றன என்பர். விக்கிரமன், ஸ்ரீவல்லபன் ஆகிய இருவர்க்கும் சேரசோழபாண்டியநாடுகளிலுள்ள சில உள்நாடுகளை நல்கினன். காமக்கிழத்திமகனான வீரபாண்டியனுக்கு எதாவது ஓர் பகுதியைக்கொடுக்க நினைத்திருந்தான். இப்படியிருக்கையில் கால கெதியால் அக் காமக்கிழத்தியின்

அழகிலும், பசப்புமொழியிலும், அவள் மகனின் கபட ஒழுக்கத்திலும் மதிமயங்கித்தனக்குப்பின் தன்னுடைய பட்டத்தை வீரபாண்டியனுக்கே கொடுத்தல் வேண்டுமெனத் துணிந்து அவ்விஷயத்தைச் சில பிரதானிகளிடம்தெரிவிக்க, அவர்கள், "அவ்வாறு செய்வது முறையன்று" என, மறுத்துரைத்தனர். அதற்குக் குலசேகரன், சுந்தரனிலும் வீரன் சிறந்த பராக்கிரமமும், கல்வியும், அறிவும் வாய்ந்தவனென்றும், இனி வரவிருக்கும் பகைவரை அவனே வெல்ல வல்லமையுள்ளவனெனவும், இன்னும் பலவிதமாகவும் தனக்குத் தோன்றியபடியெல்லாம் சமாதானங்கூறி, அவரது வாயை அடக்கிவிட்டனன். அக்காலம் அரசனுடைய ஆக்கினைக்கு எவரும் அஞ்சி ஒன்றும் பேசாதிருந்துவிட்டனர். இது தெரிந்த சுந்தரபாண்டியன் தந்தையைப்பலநாளாக வணங்கி அரசுரிமையைக் கெஞ்சிக் கேட்டுப்பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. இவ்வாறாகவே அவன், சில பிரதானிகளின் உதவிகளைப்பெற்று ஒருநாளிரவு தம் தந்தையாகிய எம்மண்டலமுங்கொண்ட குலசேகரனை அநியாயமாய்க் கொலைசெய்துவிட்டனன். இக்கொலை கி. பி. 1310-ல் நடந்ததாகத்தெரிகிறது. குலசேகரன் இறக்கவே பிரதானிகளும் குடிகளிற் சிறந்தோரும் அந்தச் சுந்தரபாண்டியனையே மதுராபுரிக்கு நாயகனாக முடிசூட்டிவைத்தனர்.

முறைகேடான எண்ணத்தால் கொலையுண்டொழிந்தான் குலசேகரன். இந்த ஒரு சம்பவமே இவன் வாழ்நாளில் இவனுக்கோர் அழுக்காவதன்றி வேறொன்றுமில்லை.

---

46—வது: ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 2-வது.

47—வது: மாறவர்மன் விக்ரமபாண்டியன்.

48—வது: ஜடாவர்மன் ஸ்ரீ வல்லபபாண்டியன்.

49—வது: வீரபாண்டியன்.

50—வது: மாறவர்மன் குலசேகரபாண்டியன் 2-வது

---

இந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், எம்மண்டலமுங் கொண்ட குலசேகரபாண்டியனின் புதல்வன். இவனைப் பற்றிய முன்வரலாறுகள் குலசேகரனிற் சொல்லப்பட்டு விட்டபடியால் பின் வரலாறுகளே இங்கு வரையப்படுகின்றன. இவன் தகப்பனை வதைத்ததும் மதுரையில் கி. பி. 1310-ல் அரியணையேறி அரசுசெலுத்தி வரலானான். பிரஜைகளும், பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும் இவனை அன்புடன் ஏற்று ஆக்கினைகளுக்கு அடங்கி போற்றலாயினர். நீதி வழுவாது நடந்தேறிவந்தது. இப்படியிருக்கையில் கொடிய வஞ்சகனும் இவனுடைய தந்தையால் அபிமானிக்கப்பட்டவனுமான வீரபாண்டியன் என்பவன் எப்படியாவது இந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியனைக் கொன்று ராஜ்யாதிபத்தியத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்றுகருதி, பல நாடுகளிலுமுள்ள சிற்றரசர், பிரபுக்கள் முதலானவர்களிடங்களிற் சென்று "சுந்தரபாண்டியன் தகப்பனைக்கொன்ற சண்டாளன், என்றும், நீதிநெறியொழுக்கமற்றவ"னெனவும்,பிறவும்அடிக்கடி சொல்லிச் சொல்லி அவர்களில் அநேகரைத் தன்வசப்படுத்திக்கொண்டான். சில ராஜாங்க உத்தியோகஸ்தர்களும் இவன் வார்த்தையில் மயங்கி இவன் பக்கஞ்சாரலாயினர்.

இவைகளையெல்லாந் தெரிந்த சுந்தரபாண்டியன் தனக்காதரவுகாட்டுவார் குறைவாயிருத்தலைக்கண்டு திடீரென மதுரையினீங்கி நாமக்கல் என்ற ஊரைத் தலைநகராக்கி ஆங்குச் சென்று வதிவதானன். இப்படி இவன் செய்யவே, வீரபாண்டியனுமவனைத் தொடர்ந்து சில சேனைகளுடன் சென்றான். சென்றவனைச் சுந்தரபாண்டியன் தலைச்சிக்குளக்கரையிலெதிர்த்தான். சிலபொழுது போர்நடந்தது. முடிவில் வீரபாண்டியன் படையும் பலமுமிழந்து காயப்பட்டுக் கைவிலங்கிடப்பெற்றான். இரண்டுநாட்செல்ல, வீரபாண்டியன் இரணஜென்னிகண்டு அறிவு மயங்கிப்போக அவனைச் சுந்தரபாண்டியன் அங்கோரிடத்திற் போட்டுவிட்டு அவன் கைவசமிருந்த ஏழு யானைகள் சுமந்துவந்த தங்கக் கட்டிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு மதுரையில் மீண்டும்வந்து ஆளுகையைப் பலப்படுத்தலானான். குடிகளுக்குப் பல நன்மைகள் செய்தான். பல கோயில்களும் இவனாற் கண்காணிக்கப்பட்டிருக்கின்றன. இவனுடைய ஆளுகையின் காலத்தைச் சந்தேகமின்றி அறிந்துகொள்ள ஓர் சாசனத்தை இங்குக் காட்டுவேன்.

"சகாப்தம் 1236 ஸ்வஸ்தி ஸ்ரீகோச்சடைய பன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 12-வது மலையடி குறிச்சி ஊற்றுக்கிணறு தனிபாணை திருவெண்காடுடையான் தமிழ தரையன் தன்மம் சுபம்."

இச் சாசனம் கி. பி. 1314ல் வரையப்பட்டதென்பது வெளிப்படை. இக்காலம் இம்மன்னன் பட்டத்துக்குவந்து 12-வது வருஷமாகுமென்று நினைக்கப்படுகிறது. ஆகவே,

முன் குறிப்பிட்ட வருஷத்துக்கும் இங்குக்காட்டிய வருஷத்துக்கும் சிறிது வித்தியாசமேற்படுகிறது. சரியான ஆண்டை ஆன்றோராய்ந்துகொள்வாராக. இன்னும் இவன் சாசனங்கள் பிறநாடுகளிலுமிருப்பனவாக முன்னமே கூறியிருக்கின்றனம்.

இங்கிவ்வாறாக, அங்கே சாகுந்தருவாயடைந்திருந்த வீரபாண்டியன், ஆயுள்பலத்தால் காயங்களாறிவிடப் பலப்பட்டெழுந்து சுந்தரபாண்டியனை அந்தரமனுப்பும் எண்ணத்தை மீண்டுங்கைக்கொண்டு 'காமட்டி' என்னுமிடத்தில் அரசுவீற்றிருப்பவனும், கொலையுண்டிறந்த குலசேகரபாண்டியனின் மகளின்மகனுமான, மானாபரணன் என்னுமரசனையடுத்து அவன் பாட்டனான குலசேகரபாண்டியனை அவன் மகன் சுந்தரபாண்டியன் அநியாயமாய்க் கொலைசெய்துவிட்டதையும் தான் பழிக்குப் பழிவாங்க அச்சுந்தரனைத் தொடர்ந்தபொழுது தோற்றுவிட்டதையுஞ் சொல்லித் துக்கித்தான். மானாபரணனும், தனது பாட்டன் படுகொலையானதைக் கேட்டுப் பெரிதும் பரிபவமடைந்தான். பிறகு அவன், வீரபாண்டியனைத்தேற்றி "நீ எப்படியும் சுந்தரபாண்டியனைக் கொல்லவேவேண்டும்; அதற்குவேண்டிய பணமும், படையும் நான் தருகின்றேன்" என்று சொல்லித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான படைவீரர்களையும், வேண்டும் நிதிகளையும் வீரபாண்டியனிட மொப்புவித்தான். உடனே வீரபாண்டியன், சேனைகள்சூழ மதுரையைநோக்கி விரைந்துவரலானான். இவனிப்படி வருதலைச் சுந்தரபாண்டியன் கேள்விப்பட்டுத் தனக்குச் செல்வமும், சேனையும், தேசமும், காலமும் தகுதியுள்ளனவாயில்லாமைகண்டு மனைவி மக்களோடு

வேண்டும் திரவியங்களையுங்கைக்கொண்டு வடக்கேநோக்கிப் பிரயாணப்பட்டான். செல்லும்நெறியில் ஆங்குப்பலநாடுகளையும் வென்றுகொண்டிருந்த அலாவுடீன்கில்ஜியினிடம் அடைக்கலம் புகுந்தான். அவனுமிவனை ஆதரிப்பதாய் வாக்களித்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டான்.

இவன்செய்தி இவ்வாருகப்,படையுடன்வந்த வீரபாண்டியன் மதுரைப்பதியில் யாதொரு தடையுமின்றிப் புகுந்து சிங்காதனமேறினுன். இஃதறிந்த அலாவுடீன்கில்ஜி, ஓர் படையைச் சுந்தரபாண்டியனிடம் கொடுத்து வீரபாண்டியனைத்தாக்கச்சொல்ல, அவனுமவ்வாறே செய்தான். இப்போர்வெகு பலமாய்ப் பலநாள் நடந்ததாகத்தெரிகிறது. இவ்விருபாண்டியர்க்கும் சேரசோழர்கள் உதவிசெய்ததாகவும் ஊகிக்கப்படுகின்றது. இப்போர் நிகழ்ந்துகொண்டிருக்கையில் அலாவுடீன்கில்ஜி, இதுதான் தக்க சமயமென்று சேரசோழநாடுகளிற் பல பாகங்களையும் கைப்பற்றிக்கொண்டான். போகும்போது சுந்தரபாண்டியனுக்கு இன்னும் உதவிசெய்வதாகவும் சொல்லினுன். இவ்விஷயமறிந்த வீரபாண்டியன், தனக்கு உபபலமாகச் சகோதரப்பான்மைகொண்டாடி உள்நாட்டில் சிற்றரசராய் வாழ்ந்துவந்த கோமாறன் விக்கிரமபாண்டியனையும், கோச்சடையன் ஸ்ரீ வல்லபபாண்டியனையும் சேர்த்துக்கொண்டான். அப்பாலுஞ்சிலகாலம் போர்நடந்துவந்தது முடிவில் சுந்தரபாண்டியன் வெற்றிமாலைசூடிச் சிங்காதனத்தின்மேற் கொலுவிருப்பதானுன். என்ருலுமிவன் தனக்குதவிசெய்தவரும் சகோதரரெனக்கொண்டவருமான விக்கிரமபாண்டியனையும் ஸ்ரீவல்லபனையும் மனமுறக்கலந்தளவளாவிவந்திருக்கிருன். இம்மு

வரிருப்பிடங்களும் வேறுவேருயிருந்தாலும் இவருடைய சாசனங்கள் தமிழ்நாடுகளிலுள்ள சில கோயில்களில்மேலுங் கீழுமாய்க்கலந்துகாணப்படுகின்றன. இதுவே இவருடைய ஒற்றுமையைவிளக்காநிற்கின்றது. இவரால் ரெக்ஷிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் பலவாகும். முகம்மதியர்களால் அழிக்கப் பட்ட சிலகோயில்களை இவர்கள், செவ்வை செய்திருப்பதாகவுந்தெரிகிறது துருக்கரை எதிர்த்து விரட்டியதாகவும் சொல்லப்படுகின்றனர்.

முற்கூறிய மூன்று பாண்டியருள் விக்கிரமபாண்டியனென்பவன், யுத்தப்பிரியனுய்ப் பலநாடுகளிலுஞ்சென்று வெற்றிப்பெற்று மீண்டதாக இவனுடைய மெய்க்கீர்த்திப் பாடல் கூறுகின்றது.

ஸ்ரீ வல்லபபாண்டியன் பிரசித்திபெற்றவனே. இவனுடைய சாசனங்களை திருநெல்வேலி திருவாலீச்வரம், விந்தநல்லூர் முதலான இடங்களிற்காணலாம்.

மாறவர்மன் குலசேகரபாண்டியன் கி. பி. 1342 வரை அரசாண்டவனுகத்தெரிகின்ருன். இவன், வீரபாண்டியனிருக்கும்பொழுதே அதாவது 1314ல் பட்டம்பெற்றிருக்க வேண்டுமெனத்துணியப்படுதலால், இக்குலசேகரன் அவ்வீர பாண்டியனின் மகனுகலாமென்று நினைக்க இடமாகிறது. இவன், தகப்பன் இறந்தபிறகு அதிககாலமிருக்கவில்லை. மூன்றே வருஷம் இருந்தான் என்கிருர்கள். இவருடைய மெய்க் கீர்த்தியும் பிரபலமாகவேயிருக்கிறது. மெய்க்கீர்த்தியிற்கண் டபடியுள்ள நாடுகளையெல்லாம் வென்றிராவிட்டாலும் தமிழ்

நாடுகளை இவன் கைவிடவில்லை என்பது திண்ணம். இவன் காலத்தில் நாடு செழிப்புற்றிருந்ததெனலாம்.

## பத்தல்மடைக் கோயில் சிலாசாஸனம்.

### மாறவர்மன் விக்கிரமபாண்டியன்,

### மெய்க்கீர்த்தி.

---

ருமகள் ஜெயமகள் திருப்புயத் திருப்பப்
பெருங்கட லாடை நிலமகள் புணரக்
கடவுள் மேருவில் கயல் விளையாட
டபுல மன்னவர் வந்தடி பணிய
நமி வரைக்கும் நெடுநில முழுவதுந்
வள வெண்குடை நீழலிற் றழைப்பச்
சங்கோனடப்பக் கருங்கலி துறந்து
வேத விதியில் நீதி நிலவச்
சோனும் வள்வனுந் திறை கொடுத்திறைஞ்ச
வீரமும் புகழு (மே) னனி விளங்க
திப்பெருஞ் சடைமுடி நாதன் சூடிய
திக்குலம் திகழ மணிமுடி சூடி
விளங்கிய வீரசிம் மாதனத்து வீற்றிருந்தருளிய
ஸ்ரீகோமாற பன்மரான திரிபுவன சக்கிரவர்த்திகள்
ஸ்ரீ விக்கிரமபாண்டிய தேவர்க்கு யாண்டு 13-வது.

---

## திருவாலீசுரம் கோயில் சிலாசாஸனம்.

### மாறவர்மன் குலசேகரபாண்டியன்

V211P
N30

---

பூதல மடந்தை புகழுடன் பொலிய
வேதமுந்தமிழு மேன்மையின் விளங்கக்
கற்புடைத்திருமகள் பொற்புயத்திருப்பத்
திக்கிரு நான்கும் சக்கரவாளமும
சூழும் புவனம் எழுங் கவிந்த
வெண்குடைநீழலிற் செங்கோ னடப்ப
நாளுறு மதியமும் ஞாயிறும் வலங்கொள்
ஆடகப் பொருப்பில் அரசுமின் னிருப்பச்
சுந்தர மார்பி லிந்திரன் பூட்டிய
ஆரமு மலங்கலு அழகுடன் திகழப்
பனையும் புலியும் வில்லும் சுரம் புக
அனையும் மன்னவர் அடிமுடி சூடி
விளங்கிய கதிர்மணி வீரசிம் மாதனத்
திலக முழுதுடையாரோடும்வீற்றிருந்
தருளிய ஸ்ரீகோமாறபன்மரான
திரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீகுலசேகரதேவர்க்கு

இடைப்பட்ட பாண்டியர்

முற்றிற்று.

# எமது புஸ்தகங்கள்.

பாண்டியராஜ வம்ச சரித்திரம்

| | |
|---|---|
| முதற்பகுதி ... ... | 0—10—0 |
| இரண்டாம் பகுதி ... ... | 0—10—0 |
| மூன்றும் பகுதி ... ... | 0—10—0 |
| எம்மண்டலமுங்கொண்ட குலசேகரபாண்டியன் அல்லது தந்தாபஹாரணம். [ஓர் அருமையான சரித்திரக்கதை] ... | 0—12—0 |
| மஹாவீர விஜயம் ... ... | 0—5—0 |
| புத்தபுராணம் (செய்யுள்) ... | 0—8—0 |
| இரக்ஷகர் (கிறிஸ்து) சரித்திரம் | 0—4—0 |

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

R. அரிகரமையர்,
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,
தீர்த்தபதி ஹைஸ்கூல்,
[illegible]பாசமுத்திரம்.